பக்கங்கள் : பன்னிரெண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 20 திங்கட்கிழமை (02.06.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 188

# தெற்கில் பெரு வெள்ளத்தால் 1,30,000 பேர் இடம்பெயர்வு!


இடம் பெயரும் மக்கள்

## இரத்தினபுரி நகரம் நீரில் மூழ்கும் அபாயம்

கொழும்பு, ஜூன் 02

கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி, களுத்துறை, காலி, கேகாலை ஆகிய ஆறு மாவட்டங்களில் பல பகுதிகளில் கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் பேய் மழை காரணமாகப் பெருவெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்த வெள்ளத்தினால் சுமார் 26,000 குடும்பங்களைச் சேர்ந்த 1,30,000பேர் இடம்பெயர்ந்தும் பாதிப்புற்றும் உள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

இந்த மாவட்டங்களில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளதால், தாழ்ந்த பகுதிகளில் இருந்து மக்களை இடம் பெயருமாறு மேற்படி நிலையம் கேட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் களனி கங்கையின் நீர்மட்டம் உயர்வடைவதால், அதன் கரையில் உள்ள மக்களை இடம் பெயருமாறு கேட்கப்பட்டுள்ளது. நேற்று மாலை வரை ஐவர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது.

இரத்தினபுரி நகரம் நீரில் மூழ்கிடும் அபாயம் உருவாகியுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

களுத்துறை, காலி, கேகாலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் மண்சரிவுகள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக எச்ச ரிக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் பாதிக்கப்பட்ட பிரதேச மக்களின் உடனடி நிவாரணப் பணிக்காக 14.05 மில்லியன்ரூபா அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் பெருமளவு மக்கள் கடும் மழை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தேசிய இடர் நிவாரண

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கைதடிக் குடும்பஸ்தர் நீர்கொழும்பில் கைது

கொழும்பு, ஜூன் 02

"இத்தாலி செல்வதற்கென கைதடியில் இருந்து வந்து நீர்கொழும்பில் தங்கியிருந்த இளைஞரும் வீட்டுக்காரரும் கடத்திச் செல்லப்பட்டுனர் என வாழ்க்கைத் தொழில் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சர் இராதாகிருஷ்ணனிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது."

இத்தகவலை பிரதியமைச்சரின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

நீர்கொழும்பு, குடாப்பாடு பீட்டர்ஸ் லேனில் கடந்த இரண்டரை வருடமாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## எத்தகைய இடையூறுகள் அரசுக்கு ஏற்பட்டாலும் வடக்கை மீட்கும் முயற்சி கைவிடப்பட மாட்டாது

### பிரதமர் ரட்ணசிறி கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 02

"கிழக்கு மாகாணத்தை மீட்ட எமது படையினர் வடக்கையும் மீட்கும் திட்டத்தை வேகப்படுத்தியுள்ளனர். வடக்கை மீட்கும் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் சதித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. புத்திசாதுரியத்துடன் மக்கள் நடந்துகொள்வதன் மூலமே இத்தகைய சதித்திட்டங்களை முறியடிக்க முடியும்."

- இவ்வாறு பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தெரிவித்தார்.

பிரதமர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே பிரதமர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்று திரண்டு பெரும் கூட்டணி?

கொழும்பு, ஜூன் 02

இலங்கை அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்ப்பதற்கு பலமான பெரிய கூட்டணி ஒன்றை அமைக்கும் முயற்சிகளில் பிரதான எதிர்க்கட்சிகள் தீவிரமாக இறங்கியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில்மேலும் தெரியவருபவை வருமாறு:-

அரசுக்கு எதிராக அமைக்கப்படவுள்ள இந்தக்கூட்டணியில் ஐ.தே.க., ஜே.வி.பி., சுதந்திரக் கட்சியின் மங்கள பிரிவு, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உட்படஅரசுக்கு எதிரான பல தரப்புகள் ஒன்றிணைந்து செயற்படவுள்ளன.

இந்தக் கூட்டணியின் தலைவராக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க செயற்படுவார் எனவும் ருக்மன் சேனநாயக்க ஐ.தே.கட்சியை வழிநடத்துவார் எனவும் கூறப்படுகிறது.

பொருளாதார மற்றும் சமூக நலன்களை முன்னிறுத்தி இந்தக் கூட்டணியில் இணைந்து செயற்பட ஜே.வி.பியும் முன் வந்திருக்கிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணாவைத் திருப்பி அனுப்ப தயாராகி வருகிறது பிரிட்டன்

லண்டன், ஜூன் 02

குடிவரவு மற்றும் கடவுச்சீட்டு மோசடி குற்றச்சாட்டின் கீழ் பிரிட்டனில் தடுத்து வைக்கப்பட்ட கருணாவை இலங்கைக்கு நாடு கடத்துவதற்கான - உறுதியான - நடவடிக்கைகளை பிரிட்டன் துரிதப்படுத்தத் தொடங்கியுள்ளது.

இதன் ஒரு பகுதியாக நாடு கடத்துவதற்கான ஆவணங்களை பிரிட்டிஷ் அதிகாரிகள் அந்த நாட்டிலுள்ள இலங்கைத் தூதரத்துக்கு அனுப்பிவைத்துள்ளதுடன், நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு கோரியுள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கருணாவின் நாடு கடத்தல் பயணத்திற்கான போக்குவரத்து ஆவணமொன்றைச் சமர்ப்பிக்குமாறும் அவர்கள் கோரியுள்ளனராம்.

எனினும், பிரிட்டனிலுள்ள இலங்கைத் தூதரகம், இவ்வாறான கோரிக்கை எதுவும் தங்களுக்கு விடுக்கப்படவில்லை என்று தெரிவித்துள்ளது.

கருணாவை கூடிய விரைவில் நாடு கடத்துவதன் மூலம் இந்த விவகாரத்திற்கு முடிவு காண்பதற்கு பிரிட்டன் அதிகாரிகள் விரும்புகின்றனர் எனவும் கூறப்படுகின்றது.

இலங்கை வெளிவிவகார அமைச்சின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்தை குண்டுவெடிப்புச் சம்பவத்தில் 13 தமிழர்கள் கைது; விசாரணையில் திருப்பம்

கொழும்பு, ஜூ 2

வெள்ளவத்தை, ராஜசிங்க வீதிக்கு அண்மையிலுள்ள பஸ் தரிப்பிடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின்பேரில் 13 தமிழர்களை வெள்ளவத்தைப் பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

குறித்த பஸ் தரிப்பிடத்தில் பயணிகளுடன் கதைத்துக்கொண்டிருந்த ஒருவரிடமிருந்த கைக்குண்டே வெடித்துள்ளது என ஆரம்பக் கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது என பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியுமான ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மதபோதகர் உட்பட நால்வர் புத்தளத்தில் கடத்தப்பட்டனர்

### வெள்ளைவான் கும்பல் கைவரிசை

கொழும்பு-ஜூன் 02

புத்தளத்தில் கடந்த சில தினங்களில் நான்கு தமிழர்கள் இனந்தெரியாத நபர்களால் கடத்திச்செல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ள பொலிஸார் இவர்களில் கிறிஸ்தவ போதகர் ஒருவரும் அடங்குவார் எனவும் அறிவித்துள்ளனர்.

ஐக்கிய தேவாலயத்தின் புத்தளத்திற்கான ஒருங்கிணைப்பாளரான கந்தையா சிவகுமார் (வயது-28) எனும் போதகரும் மரியப்பன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஊடகவியலாளருக்கு எதிரான அநீதி பற்றிய ஐ.நாவின் கேள்விக்கு அரசிடம் பதில் இல்லை

ஜெனிவா, ஜூன் 02

இலங்கையில் ஊடகவியலாளர் மற்றும் ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து விளக்கமளிக்குமாறு கோரி தன்னால் இலங்கை அரசிற்கு அனுப்பப்பட்ட கடிதங்களிற்கு உரிய பதில்கள் கிடைக்கவில்லையென நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளின் சுதந்திரம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளர் லியன்ட்ரோ டெஸ்டோய் தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் இன்று ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் கவுன்ஸிலின் கூட்டத்தொடரில் சமர்ப்பிப்பதற்காகத் தாம் வெளியிட்டுள்ள ஆவணத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

'மவ்பிம செய்தித்தாளை வெளியிட்ட 'ஸ்டான்டட் நியூஸ் பேப்பர்ஸ்' நிறுவனத்தின் நிதிப்பணிப்பாளர் துஷ்யந்த பஸநாயக்க கைது செய்யப்பட்ட வேளை, தான் இலங்கை அரசுக்கு முதலாவது கடிதத்தை அனுப்பி வைத்தார் என விசேட அறிக்கையாளர் தெரிவித்துள்ளார்.

பஸநாயக்க கைதுசெய்யப்பட்டமை சட்டத்தரணிகள் கூட அவரைப் பார்ப்பதற்கு அனுமதி வழங்காமல்பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் அவரைத் தடுத்து வைத்திருந்தமை, கைது செய்யப்படுவதற்குப் பல மாதங்களுக்கு முன்னரும் அவர் விசாரிக்கப்பட்டமை போன்றவற்றை ஐ.நா.அறிக்கையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.


பின்னர் பஸநாயக்க குற்றச்சாட்டு எதுவும் சுமத்தப்படாமல் விடுவிக்கப் பட்டமையையும் விசேட அறிக்கையாளர் தெரிவித்துள்ளார்.

கண்மூடித்தனமாகத் தடுத்து வைத்தல் தொடர்பான ஐ.நாவின் விசேட அறிக்கையாளருடன் இணைந்தும் மற்றொரு கடிதத்தை - ஊடகவியலாளர் ஜஸீகரன் கைது செய்யப்பட்டமை தொடர்பாக - இலங்கை அரசிற்குத் தாம் அனுப்பிவைத்தார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இலங்கை அரசிடமிருந்து உத்தியோகபூர்வ பதில் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என்றும் - இது குறித்துத் தான் ஆழ்ந்தகவலையடைந்துள்ளாரெனவும் - விசேட அறிக்கையாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமை கவுன்ஸிலின் அடுத்த - ஒன்பதாவது - கூட்டத் தொடரிற்கு முன்னர் தமக்குத் தெளிவான பதிலை அளிக்குமாறும் அவர் கோரியுள்ளார்.(உ)

## கண்ணீர் அஞ்சலி



திருமதி
**நீலாயதாட்ஷி சிவராஜலிங்கம்**

அன்பும் திருவும் நிறைந்த
அழகுமுகம்
மென்மையான பேச்சு சுறுசுறுப்பு
தூய்மை
உமது அணிகலன்கள்.
எல்லோரையும் அரவணைக்கும்
இனியபண்பு
ஓர் நொடியில் மறைந்ததுவோ
எங்கள்அம்மா
சொல்லொணாதுயருடன்வேண்டுகிறோம்
காமாட்சி பாதத்தில் சேர்ந்துடுவீர்.

சுதர்சன் மருந்தக உரிமையாளரும் எமது நண்பருமாகிய சி.பிரபாகன் அவர்களது தாயார் இறைபதமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகிறோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

(74931) நண்பர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நீலாயதாட்ஷி சிவராஜலிங்கம்



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவராஜலிங்கம் நீலாயதாட்ஷி நேற்று முன்தினம் (31.05.2008) சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவராஜலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி- சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு திருமதி கனகசிங்கத்தின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பூரணம் மற்றும் நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவானந்தன்(ஜெயவினோ போட்டோ பிரதி சேவை, திருநெல்வேலி), கலாநிதி(கனடா), ஜனார்த்தனன்(கனடா), பிரபாகன்(சுதர்சன் மருந்தகம், பரமேஸ்வராச் சந்தி) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஸ்ரீஸ்கந்தராஜா (ஆஸ்திரேலியா) அவர்களின் சிறிய தாயாரும், இன்பவதி (பிரதேச செயலகம், நல்லூர்), விவேகானந்தன் (கனடா), யசோதா (கனடா), புஸ்பவதி, சந்திராணி ஆகியோரின் அன்பு மாமியும் சங்கீர்த்தனா, காலஞ்சென்ற நிதர்சா மற்றும் சுதர்சன், அனுசன், சுஜித்தா, சரணி, நர்மதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.06.2008) திங்கட்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 10மணியளவில் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*86/2, சேர் பொன் இராமநாதன் வீதி,*
*பரமேஸ்வராச் சந்தி,*
*திருநெல்வேலி.*
T.P:060 221 9492

(74954) தகவல்: குடும்பத்தினர்

### சந்தனகுமாரன் கலைச்செல்வி



வேலணை மேற்கு முடிப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் காரைநகர், அறுகம்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சந்தனகுமாரன் கலைச்செல்வி நேற்று (01.06.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - விசாலாட்சி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தெண்டாயுதபாணி மற்றும் தெய்வானை தம்பதியினரின் அன்பு மருமகளும், சந்தனகுமாரனின் அன்பு மனைவியும், லலிதாம்பிகை, காலஞ்சென்ற பாலசூரியன் மற்றும் வேதநாயகி, கிருபானந்தன் (புலத்ஹொகுபிட்டியா), தையல்நாயகி (விமலா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (02.06.2008) திங்கட்கிழமை பி.ப 2மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்டர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாகம்மாள் கோவிலடி,*
*அறுகம்புலம், காரைநகர்.*

(74988) தகவல்: குடும்பத்தினர்

# சிவத்தமிழ்ச்செல்வியின் நலன் வேண்டி நாளை தென்மராட்சியில் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஜூன்2

சிவத்தமிழ்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் நலம் வேண்டி நாளை செவ்வாய்க்கிழமை தென்மராட்சிப் பகுதியில் உள்ள அனைத்து ஆலயங்கள் மற்றும் பாடசாலைகளிலும் விசேட பிரார்த்தனைகள், வழிபாடுகள், அபிசேகங்களை நடத்துமாறு சரசாலை வீரமாகாளி அம்பாள் ஆலய பரிபாலன சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்தநிகழ்வுகளை முன்னின்று நடத்துமாறு பாடசாலை அதிபர்கள், ஆலய அறங்காவலர்கள், பரிபாலன சபையினர் ஆகியோரிடம் வீரமாகாளி அம்மன் ஆலய பரிபாலன சபையின் சார்பில் அதன் தலைவர் சி.சிதம்பரநாதக்குருக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார். (203)

# வவுனியாவில் கொள்ளை

கொழும்பு, ஜூன் 02

வவுனியா தெற்கு, இலுப்பைக்குளப் பகுதியில் அமைந்துள்ள அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் 30 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் இனந்தெரியாத நபர்களினால் கொள்ளையிடப்பட்டிருக்கின்றன எனத் தெரியவந்தது.

இந்த நிறுவனத்தின் காவலாளியின் கைகள், கால்கள் மற்றும் வாயைக் கட்டிப் போட்டுவிட்டு உள் நுழைந்த கொள்ளையர்கள் அங்கிருந்த கணினிகள் உட்படப் பல முக்கிய உபகரணங்களை அபகரித்துச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக வவுனியாப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (சி)


அன்ன ஞானவயிரவர் தேவஸ்தான பரிபாலன சபை

**சீட்டிழுப்பு முடிவுகள்**

*அச்செழு இராசுவான் குறிஞ்சி அன்ன ஞானவைரவர் கட்டட நிதிக்காக 31.05.2008 சனிக்கிழமை நடத்தப்பட்ட சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு:-*

முதலாம் பரிசுக்குரிய வெற்றி எண் – 803,
இரண்டாம் பரிசுக்குரிய வெற்றி எண் – 2776,
மூன்றாம் பரிசுக்குரிய வெற்றி எண் – 831,
ஆறுதல் பரிசுக்குரிய வெற்றி எண்கள் - 2800, 1579, 347, 1326, 849

*பரிசுக்குரிய அதிர்ஷ்டசாலிகள் எதிர்வரும் 10.06.2008இற்கு முன்னர் பரிசுகளை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். பங்கு பற்றிய அனைவருக்கும் நன்றி.*

தொடர்புகளுக்கு:-
இ.செல்வராசா, செயலாளர்,
[illegible]
தொ.பே- 0773564192


## கண்ணீர் அஞ்சலி



எமது பேரவையின் ஆரம்பகாலத் தலைவரும் குரும்பசிட்டி ஸ்ரீமுத்து மாரியம்மன் ஆலய பிரதமகுருவும் இருப்பாலை காலஞ்சென்ற சிவானந்தம் அதிபர் அவர்களின் சகோதரரின் மகனுமான

**சிவஸ்ரீ தி.மாணிக்கவாசகக்குருக்கள்**

அவர்கள் 31.05.2008 பெரியகல்லாறு கல்முனையில் இறைபதம் அடைந்தமை சைவ உலகிற்கு பேரிழப்பாகும். எமது பேரவையின் உப தலைவர் சிவஸ்ரீ துரையப்பா விவேகானந்தக்குருக்களின் சகோதரர் முன்னாள் மேலதிக அரச அதிபர் வைத்திலிங்கம் அவர்களின் இழப்பும் சைவஉலகுக்கு பேரிழப்பாகும். அமரர் வைத்திலிங்கம் அவர்களும் அவரின் மைத்துனர் அமரர் மாணிக்கவாசகக்குருக்களும் ஏககாலத்தில் எம்மைவிட்டு பிரிந்தமை ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். இருவரது ஆத்மாக்களும் இறைபதமடைய பேரவை சார்பிலும் குரும்ப சிட்டி மக்கள் சார்பிலும் பிரார்த்திக்கின்றோம்.

க.சோமசுந்தரக்குருக்கள், செயலாளர்,
அனைத்துலக சைவக்குருமார் அர்ச்சகர் பேரவை.

## மரண அறிவித்தல்கள்

### சம்பந்தர் கௌரிதாசன்



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் புத்தூரை வதிவிடமாகவும் கொண்ட சம்பந்தர் கௌரிதாசன் நேற்று (01.06.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சம்பந்தர் - மதிவதனா தம்பதியரின் அன்பு புதல்வனும், தங்கக்கமலேஸ்வரியின் அன்புக் கணவனும், மதிவதனி (லண்டன்), மதன் (லண்டன்), இந்துமதி, காலஞ்சென்ற ராகவன் மற்றும் வைகுந்தவாசம் (U.N.H.C.R, திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், அருட்குமார் (லண்டன்), கோபிகா (லண்டன்), பூலோகராசா, இதயநாயகி ஆகியோரின் அன்பு மாமனும், ராகவி, சஞ்ஜீவ், குருதேவ், சுவேதா ஆகியோரின் அன்புப் பேரனும், இராசலட்சுமி, மோகனதாசன், நளினி, சிவகுமாரி, குகதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாலரட்ணசிங்கம், சண்முகரத்தினசிங்கம், ஞானராஜா, திருமதி சிவசுப்பிரமணியம் - கமலரத்தினதேவி, திருமதி கிருஷ்ணகுமார் - செல்வமலர் ஆகியோரின் அன்பு மைத்துன ரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறி விக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புத்தூர் மேற்கு,*
*புத்தூர்.*

(சி/553055) தகவல்: த.பாலரத்தினசிங்கம் (மைத்துனர்)

### யோகரத்தினம் கீதன்



யாழ்ப்பாணம், சுண்டுக்குளி, கச்சேரியடி, காட்டுக்கந்தோர் ஒழுங்கையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட யோக ரத்தினம் கீதன் (பழைய மாணவன், யா/பரி யோவான் கல்லூரி - Junior Executive, சிலிங்கோ இன்சூரன்ஸ், கொழும்பு) 31.05. 2008 சனிக்கிழமை கொழும்பில் அகால மரணமானார்.

அன்னார் கந்தையா யோகரத்தினம் (பொறுப்பதிகாரி, திடீர் பரிசோதனைக் குழு, CTB, கோண்டாவில்) - லலிதா (முன்னை நாள் உத்தியோகத்தர், விற்பனைத் திணைக்களம், யாழ்ப்பாணம்) தம்பதியரின் மகனும், யசித்ரா (ஆசிரியை, யா/பரி - யோவான் கல்லூரி - கல்வியியற் கல்லூரி), வானதி (கல்வியியற் கல்லூரி, கோப்பாய் - உள்ளகப் பயிற்சி ஆசிரியை - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*18/1, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,*
*கச்சேரியடி.*
*T.P. 0212225503*

(74990) தகவல்: யோகரத்தினம் (தந்தை - CTB - கோண்டாவில்)

### சுந்தரம்பிள்ளை நாகலிங்கம்
**[முன்னாள் கூட்டுறவு பரிசோதகர் K.P]**

காரைநகர், கருங்காலியைப் பிறப்பிடமாகவும் பலகாட்டை வசிப்பிடமாகவும் தற்போது எட்டியாந்தோட்டையை வதிவிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை நாகலிங்கம் அவர்கள் 30.05.2008 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கதிர்காமர் வேலுப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற விசாலாட்சி, தம்பாபிள்ளை, பூரணம், வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்பு சகோதரரும், ராணி, ராஜன், உதயம், லிங்கம் ஆகியோரின் அன்பு தந்தையும், இராஜரட்ணம், லோகநாயகி, திருஞானசம்பந்தர், பங்கயச்செல்வி ஆகியோரின் மாமனும், சர்மிளா, ரூபா, விஜி, சங்கீதா, மேனகா, பவிதன், அஜந்தன், கோகுலன், யதுரன், வைஷ்ணவி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று (02.06.2008) திங்கட்கிழமை மு.ப. 9 மணி தொடக்கம் பி.ப. 2 மணி வரை இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் இறுதிக்கிரியைகள் நடைபெற்ற பூதவுடல் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ராணி 416 - 7464969*
*ராஜன் 416 - 9298908*
*உதயம் 416 - 7470407*
*லிங்கம் 905 - 4177429*

(A) தகவல்: பிள்ளைகள் (கனடா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.நகரில் பரவும் நெருப்புக் காய்ச்சலுக்கு தெருவோர உணவு வியாபாரமும் காரணம்?

## சந்தேகம் வெளியிடுகிறார் சுகாதார அதிகாரி

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ். நகரப்பகுதியில் சுகாதாரமற்ற முறையில் தெருவோரங்களில் உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதுவே தற்போது பரவிவரும் நெருப்புக் காய்ச்சலுக்குக் காரணமாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கின்றோம்.

இவ்வாறு யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தை அண்மித்த பகுதிகளில் குறிப்பாக ஆஸ்பத்திரி வீதி, வைரவர் கோயில் வீதி, மின்சார நிலைய வீதி ஆகிய பகுதிகளில் உணவுப் பண்டங்கள், பழவகைகள் என்பவை சுகாதார விதிமுறைகளுக்கு ஏற்ப விற்பனை செய்யப்படுவதில்லை. அத்துடன் சர்பத் போன்ற மென்பான வகைகளும் சுகாதார மற்ற முறையில் விற்பனை செய்யப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

பஸ்நிலையப் பகுதியில் சனநெரிசல் அதிகமாக உள்ளது. அத்துடன் புகை, தூசு, இலையான் போன்றவற்றாலும் உணவு கையாள்பவரின் தனிநபர் சுகாதார நிலை, அவரின் மருத்துவப் பரிசோதனை நிலை என்பவை காரணமாகவே தற்போது நெருப்புக் காய்ச்சல் பரவி வருகின்றதாக சந்தேகிக்கின்றோம்.

எனவே தெருவோர உணவு வியாபாரிகள் யாழ். மாநகர சபை ஆணையாளரின் இவ்வருடத்திற்கான (2008) அனுமதிச் சான்றிதழ் இன்றி இத்தெருவோர வியாபாரத்தைச் செய்ய வேண்டாம் என அறிவுறுத்துகின்றேன் - என்றுள்ளது. (202)

# தென்மராட்சிப் பிரதேச வீடமைப்புத் திட்டத்திற்கான கூரைத் தகடுகள் வந்துள்ளன

யாழ்ப்பாணம், ஜூன் 2

தென்மராட்சிப் பிரதேசத்தில் உலக வங்கியினால் மேற்கொள்ளப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டத்திற்கான கூரைத் தகடுகள் பிரதேச செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

ஏற்கனவே கூரை வேலைகள் பூர்த்தி செய்த பயனாளிகளுக்கே இந்தக் கூரைத் தகடுகள் வழங்கப்படவுள்ளன எனப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (202-207)

# கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நபருக்கு ஒருவருட சிறையும் ஒரு லட்சம் அபராதமும்!

## பருத்தித்துறை நீதிமன்றம் வழங்கியது

மந்திகை, ஜூன் 2

பருத்தித்துறைப் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட ஒருவருக்கு ஒரு வருட கடூழியச் சிறையும் ஒரு லட்சம் ரூபா அபராதமும் பருத்தித்துறை நீதிமன்றம் விதித்துள்ளது.

பருத்தித்துறைப் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது பருத்தித்துறைச் சந்தை மேற்குப் பகுதியைச் சேர்ந்த நேசராசா ஸ்ரீனிவாசன் என்பவர் கைது செய்யப்பட்டார்.

பருத்தித்துறை நீதிபதி கே.அரியநாயகம் முன்னிலையில் இவர் ஆஜர் செய்யப்பட்டபோது சம்பந்தப்பட்டவர் குற்றத்தை ஒப்புக் கொண்டார் என்று கூறப்பட்டது.

குறிப்பிட்ட நபர் முன்னரும் பல தடவைகள் கசிப்பு விற்பனை செய்த குற்றம் காரணமாக நீதிமன்றில் தண்டனை பெற்றவர் என இங்கு சுட்டிக் காட்டப்பட்டது.

இதனையடுத்து குற்றவாளிக்கு ஒரு லட்சம் அபராதமும் ஒரு வருட கடூழியச் சிறையும் விதிக்கப்பட்டது. அபராதம் கட்டத் தவறின் மேலும் ஒரு வருடம் கடூழியச் சிறை அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிபதி உத்தரவிட்டார். (203-218)

# பெருந் திருவிழா

கரவெட்டி, ஜூன் 2

பொலிகண்டி கந்தவனம் கல்யாண வேலவ சுவாமி ஆலய வருடாந்தப் பெருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை சப்பரத் திருவிழாவும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும் 18 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

தினமும் காலை 8.30 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகிப் பூசைகள் நடைபெறும். மாலைத் திருவிழா 3 மணிக்கு இடம்பெறும். (203-70)

# கணனிவள நிலையத்திற்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜூன்2

தீவக வலய கணனி வள நிலையத்திற்கான முகாமையாளர், விரிவுரையாளர், பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர் வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

முகாமையாளர் ஆகக் குறைந்தது ஆசிரிய சேவையில் 2-1 தரமுடையவராகவும் 6 மாதத்திற்கு குறையாதபடி பயிற்சியுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

விரிவுரையாளர் 2 வருடத்திற்கு குறையாத ஆசிரிய ஆலோசனையுடன் கணனி விஞ்ஞானப்பட்டம் அல்லது பட்டத்தில் கணனி பிரதான பாடமாக கற்றிருத்தல் வேண்டும். அத்துடன் நிகழ்ச்சித் திட்டங்கள் கருதும் ஆற்றல் உடையவராக இருத்தல் வேண்டும். (203)

# நிதி உதவி வழங்கும் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 2

சண்டிலிப்பாய், சாவகச்சேரி நல்லூர் பிரதேச செயலருடன் இணைந்து அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 110 பயனாளிகளின் முதற்கட்டமாக தொழில் திட்டமிடல் பயிற்சி நெறியினை நிறைவு செய்த 39 பேருக்குத் தொழில் ஆரம்பிப்பதற்கான நிதியுதவி இன்று அகதிகள் புனர்வாழ்வு நிறுவன கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

நிறுவனத் தலைவர் பேராசிரியர் ப. சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கிறிஸ்தவ நிதியத்தின் அவசரகால நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் திருமதி தர்சினி மகேந்திரனும் சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம், நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், சாவகச்சேரி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் ஆகியோரும் கலந்துகொள்வர். (1)



யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியின் 8 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது: இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக விவசாயபீட, விவசாய உயிரியல் துறைத் தலைவர் கலாநிதி மிகுந்தன், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ.துரைராசாவின் நினைவுப் பேருரையை "இனியொரு பசுமைப் புரட்சி செய்வோம்" என்ற பொருளில் நிகழ்த்தினார். பேராசிரியர் அ.துரைராசாவின் உருவப் படத்தை முதலாவது படத்திலும் கலாநிதி மிகுந்தன் நினைவுப் பேருரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன், வைத்திய கலாநிதி வை.தியாகராஜா மற்றும் கலந்துகொண்டோரை மூன்றாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# பருத்தித்துறை, புலோலி பிரதேசங்களிலுள்ள பாவனைக்கு உதவாத பொருள்கள் அழிப்பு

மந்திகை, ஜூன் 2

பருத்தித்துறை, புலோலி பகுதிகளில் உள்ள விற்பனை நிலையங்கள் மீது பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போது பாவனைக்கு உதவாத பெருமளவான பொருள்கள் கண்டு பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

பாவனைக்கு உதவாத பொருள்களை விற்பனைகென வைத்திருந்தவர்களும் சுகாதாரப் பிரிவினரால் எச்சரிக்கப்பட்டனர்.

புலோலி பொதுச் சுகாதார பரிசோதகர், பருத்தித்துறைப் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் அடங்கிய குழுவினர் இந்த திடீர் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இத போது 14 வர்த்தக நிலையங்களில் இருந்து பாவனைக்கு உதவாத பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

பிஸ்கட் வகைகள், சொக்லேட் வகைகள் போன்ற பொருள்களே இவ்வாறு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

இதே வேளை - அனுமதிப் பத்திரம் இன்றி ஐஸ்கிறீம் விற்பனையில் ஈடுபட்டவர்களும் எச்சரிக்கப்பட்டதுடன் அவர்கள் ஐஸ்கிறீம் விற்பனை செய்வதற்கும் தடைவிதிக்கப்பட்டது. (203-218)

# தொழிலாளர் கல்வி டிப்ளோமா மீள் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ்.பல்கலைக்கழக தொழிலாளர் கல்வி அலகில் டிப்ளோமா கற்கை நெறியை மேற்கொண்ட (கல்வியாண்டு 2000-2001, 2001-2002) மாணவர்களுக்கான மீள் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

மாணவர்கள் தாம் மீளத் தோற்ற வேண்டிய பாடம் குறித்த விவரங்களை இரண்டு வார காலத்துக்குள் அலுவலக நாள்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை தொழிலாளர் கல்வி அலகில் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

# யூனியன் கல்லூரி அதிபரின் இடமாற்ற விவகாரம் குறித்து கல்லூரிச் சமூகம் அமைச்சர் டக்ளஸுடன் பேச்சு

யாழ்ப்பாணம், ஜூன் 2

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் இடமாற்றம் தொடர்பாகக் கல்லூரிச் சமூகத்தினர், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் சனிக்கிழமை கலந்துரையாடியுள்ளனர்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அமைச்சரது யாழ்.அலுவலகத்தில் சந்தித்துக் கல்லூரி அதிபரின் இடமாற்றத்தை இரத்துச் செய்வது தொடர்பில் தங்களது கருத்துக்களை முன்வைத்தனர்.

இதன் பிரகாரம் கல்லூரி அதிபர் இன்னும் சில காலத்தில் ஓய்வுபெற இருப்பதால் அது வரையில் தொடர்ந்து அவர் தங்களது கல்லூரியில் பணியாற்றி அவரைக் கௌரவமான வகையில் ஓய்வுபெறச் செய்ய வேண்டும் என்பதும், ஒரு சிலரது திட்டமிட்ட சதி காரணமாகவே அதிபர் இடமாற்றத்திற்கு உள்ளனர் என்பதும் மாணவர்களது பொதுவான அபிப்பிராயமாக இருந்தது.

தங்களது கல்லூரி அதிபரை இட மாற்றம் செய்ய செய்யவேண்டாம் எனக் கோரி இம் மாணவர்கள் ஏற்கனவே பாடசாலை பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தகாகும்.

இம் மாணவர்களது கருத்துக்களைச் செவிமடுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கல்லூரி அதிபர் இடமாற்றம் தொடர்பில் பல்வேறு அபிப்பிராயங்கள் தனக்கு முன்வைக்கப்பட்டிருப்பதாகவும் இதனால் அத்தரப்பினர் அனைவருடனும் கலந்துரையாடி அடுத்தவார முடிவில் நல்லதொரு தீர்வினைப் பெற்றுத் தருவதாகத் தெரிவித்தார்.

மனிதனின் அடிப்படை சுதந்திரங்களில் ஒன்றான கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்தை மதிக்க வேண்டும் என்பதை இங்கு வலியுறுத்தியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா , எனவே அதிபர் இடமாற்றம் தொடர்பில் பல்வேறு மாற்றுக் கருத்துக்கள் நிலவுவதால் அத்தரப்பினர் அனைவரையும் அழைத்துக் கலந்துரையாடுவதுடன் அதிபர் மாற்றத்திற்குரிய முக்கிய காரணியாகவுள்ள உலக உலர் உணவுத் திட்டத்துடன் தொடர்புடைய அதிகாரிகளுடனும் கலந்துரையாடிப் பக்க சார்பற்ற, நடைமுறை சாத்தியமானதும் நியாயமானதுமான தீர்வொன்றை அடுத்த வார இறுதியில் தான் பெற்றுத்தருவதாக மாணவர்களிடம் உறுதியளித்துள்ளதுடன் மாணவர்கள் தங்களது கல்விக்கு எவ்வித இடையூறுகளையும் விளைவிக்காமல் கல்வி நடவடிக்கைகளைத் தொடரும்படியும் கேட்டுக்கொண்டார்.

இச் சந்திப்பின்போது வலயக் கல்விப் பணிப்பாளர், யூனியன்கல்லூரியின் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# வடமராட்சிப் பிரதேச செவிப்புலனற்றோருக்கு அங்கேயே கற்றல் வசதி செய்யக் கோரிக்கை

மந்திகை ஜூன் 2

வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள செவிப்புலனற்றோர்கள் தமது கற்றல் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு வடமராட்சியில் ஒரு பாடசாலை யில் கற்றல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரைக் கேட்டுள்ளார்.

இப்பிரதேசத்தில் உள்ள செவிப்புலனற்றோர்கள் கற்றல் செயற்பாடுகளுக்கு தூர இடங்களுக்கு செல்கின்றனர். இன்றைய போக்குவரத்துப் பிரச்சினைகள் அவர்களுக்குப் பெரும் சிரமங்களை ஏற்படுத்துகின்றன.என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது விடயம் சம்பந்தமாக ஓய்வு பெற்ற நவீல்ட் பாடசாலை அதிபர் எஸ். கோபால கிருஸ்ணனின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளலாமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-118)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உதயன் ஊடக அனுசரணையுடன் 'நுளம்புடன் ஒரு குருஷேத்திரம்' இறுவெட்டு வெளியீட்டுவிழா யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று நடைபெற்றது. நிகழ்வில் தொற்று நோய்த் தடுப்பு அதிகாரி வைத்திய கலாநிதி ந.சிவபாதம் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும் இறுவெட்டின் பிரதியை வைத்திய கலாநிதி என்.சிவன்சுதனிடம் இருந்து இலங்கை வங்கியின் வட பிரதேச உதவிப் பொது முகாமையாளர் அருமைநாயகம் பெற்றுக் கொள்வதை இரண்டாவது படத்திலும் காணலாம். மருத்துவ பீடாதிபதி வைத்திய கலாநிதி என்.சிவபாலன், வைத்திய கலாநிதி எஸ்.சிவன்சுதன், அரச அதிபர் கே.கணேஸ், வைத்திய கலாநிதி என்.சிவராஜா ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகக் கிளை முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள் : லக்ஸ்மன்)

## தேசிய மட்டத் தமிழ்த் தினப் போட்டியில் முதலிடம் பெற்ற சாவகச்சேரி இந்துவின் ஆசிரியர், மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்2

தேசிய மட்டத்தில் நடைபெற்ற தமிழ் தினப் போட்டிகளில் பங்குபற்றி முதலாம் இடத்தை பெற்றுத் திரும்பிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களையும் ஆசிரியர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கல்லூரி அதிபர் அ.கைலாயபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதன்மை அதிதியாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.பிரேமகாந்தன் கலந்து கொண்டார்.

நிகழ்வில் இசை ஆசிரியர் பொன்.வாமதேவன் மற்றும் நடன இசை ஆசிரியர்கள், நிகழ்வில் கலந்து கொண்ட ஆசிரியர்கள், மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இசை ஆசிரியர் பொன்.வாமதேவன் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

மாணவர்களுக்கு விருதுகளும் ஆசிரியர்களுக்கு நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (203-131)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன்2

தெல்லிப்பழை விழிசிட்டி பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திரர் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (203)

* * *

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 9ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதி தேர்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (203)

## 13.05.2008 உதயனில் வெளியான தரம் 5 புலமைப்பரிசில் இலகுவழிப் பயிற்சியின் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01. 2 | 02. 2 | 03. 3 | 04. 3 |
| 05. 1 | 06. 2 | 07. 2 | 08. 1 |
| 09. 2 | 10. 1 | 11. 2 | 12. 1 |
| 13. 3 | 14. 1 | 15. 2 | 16. 1 |
| 17. 1 | 18. 3 | 19. 1 | 20. 2 |
| 21. 3 | 22. 3 | 23. 1 | 24. 2 |
| 25. 3 | 26. 3 | 27. 1 | 28. 3 |
| 29. 2 | 30. 2 | | |


## அன்பான வாசகர்களே!

முன்னணியில் திகழும் உங்கள் அபிமானத்துக்குரிய உதயனில் பிரசுரமாகும் மரண அறிவித்தல்கள் மற்றும் நினைவஞ்சலிகள் கடந்த பல மாதங்களாகக் கொழும்பிலிருந்து வெளிவரும் சுடர் ஒளி யிலும் இலவசமாக வெளியாகின்றன. இந்தச் சலுகை மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

உதயன்


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 30.11.1949

ஆண்டவன் திருவடியில் 13.06.2007

### அமரர் குமாரசுவாமி சந்திரகுமார்

(ஓய்வு பெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசன இலாகா, யாழ்ப்பாணம்)

திதி : 02.06.2008 அபரபக்க சதுர்த்தசி

அன்பின் திருவுருவே, எம்மைப் பிரிந்து நீங்கள் சென்று ஓராண்டு காற்றாகிக் கழிந்து விட்டது. ஆனாலும் உங்கள் நினைவுகள் எமை விட்டு நீங்காது.

முன்பள்ளி ஒழுங்கை,
ஊரெழு கிழக்கு,
ஊரெழு. (சி/553074)

மனைவி,
E.S.தம்பிமுத்து குடும்பம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 24 ★ 06 ★ 1930



மறைவு 03 ★ 05 ★ 2008

### திருமதி தாமோதரம்பிள்ளை ஜெயலட்சுமி

தரணியில் எமையாளாக்கிய தாயே! தவிக்க விட்டுச் சென்றீர்களே!
காலனவன் கருணையின்றி உங்கள் ஆவி கொண்டு போனானே!
காவிரியாய் எங்கள் துன்பம் பெருகுகின்றதே

கடந்த 03.05.2008 அன்று இறைபதமடைந்த எங்கள் அன்புத் தாயின் அந்தியேட்டி சபிண்டீகரண நிகழ்வுகள் இன்று (02.06.2008) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறுகின்றன. எமது தாயின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் அனைத்து அன்பு உள்ளங்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. - 20, திருமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/553084)

## தவறிவிட்டது

பூமனை வீதி, பொன்மனை, மருதனார்மடம் எனும் முகவரியுடைய திருமதி பரராஜசிங்கம் மதுரை மீனாட்சி என்பவரின் தே.அ.அட்டை (518270370V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (74978)

## தேவை

CDMA தொலைபேசி இணைப்பு உடனடியாகத் தேவை.

விளம்பர இல.: 3104
மே/பா. உதயன் (74987)

## சல்லி விற்பனைக்கு

முக்கால் (3/4")கியுப் ஒன்றின் விலை ஏற்றுக் கூலி இல்லாமல் ஐந்து நூல் (3/8") சல்லி - 4100/=, முக்கால் இஞ்சி (3/4") சல்லி - 3600/=, அரை இஞ்சி (½") சல்லி - 2300/=

தொடர்புக்கு : நீர்வேலி சந்திக்கு அருகில்
077 4047912 (74899)

## ஒத்துமாறல்

திருகோணமலை கல்வி வலயத்தில் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றும் ஒருவர் யாழ்ப்பாணப் பாடசாலை ஒன்றுக்கு ஒத்துமாற விரும்புகிறார்.

விளம்பர இல: 3103
மே/பா: உதயன் (74982)

## மணமகள்கள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்கள்
1974 -M.B.BS Doctor, 1975 -எஞ்சினியர்
1970 -இரத்தப் பரிசோதகர், 1973-B.A மாஸ்ரர்
1966 - B.Sc மாஸ்ரர், 1975-எக்கவுண்டன்
இன்னும் பல சாதகம் உள்ளூர், வெளிநாடு இருக்கிறது.
[illegible] (74953)

## ஈரவிழியில் ஓராண்டு

மலர்வு 24 ★ 08 ★ 1938



உதிர்வு 15 ★ 05 ★ 2007

### அமரர் பரமசாமி சண்முகலிங்கம்

திதி:02.06.2008

எம்மை வாழவைத்த தெய்வமே! கண்ணீர் கடலில் எம்மை வீழ்த்தி விட்டு சென்றதேன்? நெஞ்சு கொதிக்குது - ஐயா உம் நேசக்கரம் இல்லாமல் ஓராண்டு ஓடிப்போனாலும் ஓயுமா உம் நினைவலைகள்!

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. (74973)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சிவஸ்ரீ திருநாவுக்கரசு மாணிக்கவாசகக் குருக்கள்

(மட்டக்களப்பு)



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு, பெரியகல்லாற்றை வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கவாசகக் குருக்கள் 31.05.2008 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2008) திங்கட்கிழமை பெரிய கல்லாற்றில் நிகழவுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தம்பசிட்டி,
பருத்தித்துறை.
தொ.பே:067 222 3313 (74979)

தகவல்:
இ.மண்டலேஸ்வரக்குருக்கள்.
(மருமகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்ப கால பாடசாலையாகவே இன்றும் காட்சியளிக்கும் இருபாலை கிழக்கு சிலோன் கிறிஸ்தவ த.க. பாடசாலை



பாடசாலை அதிபர்

பிரதான வீதியில் இருந்து சுமார் மூன்று கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பால் இருக்கும் இப்பாடசாலை பொதுப்போக்குவரத்து வசதிகள் எவையும் அற்ற நிலையிலேயே காணப்படுகின்றது.

இப்பிரதேச மாணவர்களின் கல்விக்கு இந்தப் பாடசாலையை மட்டுமே நம்பியிருக்கும் நிலைமையே காணப்படுகின்றது.

தனியார் கல்வி நிலையங்களுக்கு மாணவர்கள் சென்று வருவதற்கான வாய்ப்புகளும் மிகவும் குறைவாகவே உள்ளது.

பாடசாலை ஆசிரியர்களின் முயற்சியினால் கடந்த ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் ஒரு மாணவன் அதிகூடிய புள்ளியாக 168 புள்ளிகளைப் பெற்றுச் சித்திய அடைந்துள்ளார்.

மற்றும் இரண்டு மாணவர்கள் 100 இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளார்கள்.

கோப்பாய் கல்விக்கோட்டத்திற்கு உட்பட்ட இருபாலை கிழக்கு சிலோன் கிறிஸ்தவ தமிழ் கலவன் பாடசாலையே இவ்வாறான நிலைமைகளுடன் தனது கல்விச் செயற்பாடுகளைமேற்கொண்டு வருகின்றது.

தென்னிலங்கையில் கடமையாற்றிய திருமதி கமலாவதி சுந்தரலிங்கம் தற்பொழுது யாழ்.மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்று இப்பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றி வருகின்றார்.

பாடசாலை பற்றி இவருடன் கலந்துரையாடியபோது தென்னிலங்கையில் உள்ளது போல் வசதி வாய்ப்புகளைக் கொண்ட ஒரு பாடசாலையாக இப்பாடசாலையும் மாற்றப்படவேண்டும் என்ற நோக்கத்துடன் தாம் செயற்பட்டு வருவதாகக் கூறினார்.

தரம் ஒன்று தொடக்கம் 5 வரையான வகுப்புகளைக் கொண்டுள்ள இப்பாடசாலையில் அதிபருடன் ஆறு ஆசிரியர்கள் கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கணனிக் கல்விக்காக ஒரு தொண்டர் ஆசிரியர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவருக்கான மாதாந்தக் கொடுப்பனவை வைத்திய கலாநிதி தியாகராசா வழங்கி வருகிறார்.

இப்பாடசாலையின் சுற்றாடலில் உள்ள பிள்ளைகளில் 90 வீதமான ஆரம்பக்கல்வி மாணவர்கள் இப்பாடசாலையிலேயே கற்று வருகின்றமை பாடசாலைக்குப் பெருமை சேர்க்கின்றது.

ஆங்கில ஆசிரியர்விடயத்தைப்பொறுத்த மட்டில் இங்கும் குறைபாடே காணப்படுகின்றது.

## வசதி வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டுமென்பது பாடசாலை அதிபரின் கோரிக்கை

ஆனாலும் கூட யுனிசெப் நிறுவனத்தினால் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர் ஒருவர் இங்குள்ள மாணவர்களுக்கு ஆங்கிலத்தைக் கற்பித்து வருகின்றார்.

தமிழ்த்தினப் போட்டிகள், ஆங்கில தினப் போட்டிகளிலும் மாணவர்கள் கலந்து கொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. கோட்ட மட்டத்தில் மட்டுமன்றி வலய மட்டத்திற்கும் இப்பாடசாலை மாணவர்கள் சென்று வருகின்றனர்.

இந்தப் பாடசாலையில் குடிதண்ணீர் பிரச்சினை பெரும் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. பாடசாலையில் மட்டுமல்ல இக்கிராமத்திலும் இது ஒரு பிரச்சினையாகவே உள்ளது. கோப்பாய் பிரதேச சபையின் குடிதண் ணீர் பௌசர் மூலமே இப்பாடசாலைக்குக் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.

இவர்களால் குடிதண்ணீர் வழங்கத் தவறின் மாணவர்கள்பெரும் நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும்.



பாடசாலையின் முகப்புத் தோற்றம்

பெற்றோர்களுக்கும் பாடசாலைக்கும் இடையே நல்லுறவு காணப்படுகின்றது. பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் இயங்கி வருகின்றது. 1905 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு நூற்றாண்டைக் கடந்த நிலையில் உள்ள இப்பாடசாலை அன்றைய வசதி யீனங்களுடன்தான் காணப்படுகின் றது.

பாடசாலை அதிபரின் முயற்சி காரணமாக கணனி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் தரம் 3, 4, 5 மாணவர்களும் ஓரளவுக்கு கணனி பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலை வகுப்பறைகள் மூடி அடைக்கப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன.

நவீன கற்றல் முறைகளுக்கு ஏற்ப வகுப்பறைகள் இல்லை என்று ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆரம்பப் பாடசாலையாக இது இருப்பதினால் சிறுவர் பூங்காவின் தேவை அவசியமாக உள்ளது எனவும் தற்போது இருக்கும் பூங்கா அழகுபடுத்தப்படுவதுடன் மேலும் சில உபகரணங்கள் இணைக்கப்படவும் வேண்டும் என்றும் பாடசாலை அதிபர் தெரிவிக்கிறார்.

பாடசாலைக்கென ஒரு விளையாட்டு மைதானம் இல்லாத நிலையில் அதிபரும் ஆசிரியர்களும் எடுத்த பெரும் முயற்சி காரணமாகத் தனியாரிடமிருந்து 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவிற்குக் காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான உதவியை கனடாவில் வாழும் இருபாலை கிழக்கு அபிவிருத்திச் சங்கம் வழங்கியுள்ளது.

விளையாட்டுப் போட்டிகளுக்கு எ.எம்.ரி நிறுவனம், பாலம் திட்டம், கானான் தேவாலயம், சிறுவர் பாதுகாப்பு நிதியம் போன்ற அமைப்புகள் உதவி செய்து வருகின்றன.

பெற்றோர்கள் பாடசாலைக்கு வேண்டிய சரீர உதவிகளைச் செய்து வருகின்றனர். எனினும் பொருளாதார உதவிகளைச் செய்யக்கூடிய வசதிகள் அற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

தமது பிள்ளைகள் நல்ல முறையில் கல்வி கற்கவேண்டும், உயர்கல்வி கற்க வேண்டும் என்ற விடயங்களில் மிகவும் அக்கறை உடையவர்களாகப் பெற்றோர்கள் இருக்கின்றார்கள். எனினும் பிள்ளைகளின் சில தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாத நிலைமையில் இருக்கின்றார்கள்.




பிள்ளைகளுக்கு வேண்டிய சப்பாத்துகள், பாடசாலைப் பைகள் என்பன பாடசாலை வரும் பிள்ளைகளில் 95 வீதத்திற்கு மேற்பட்டவர்களிடம் இல்லாத நிலைமையே காணப்படுகின்றது.

இந்தத் தேவைகளை அரச சார்பற்ற நிறுவனங்கள் மனம் வைத்து பூர்த்திசெய்ய வேண்டும் என்ற கோரிக்கையும் அதிபரினால் விடுக்கப்பட்டுள்ளது. ✱

**பவித்திரன்**

# வளர்ந்துவரும் நவீன உலகில் கணனியின் முக்கியத்துவமும் பயனும்

இன்றைய உலகில் கணனி மிக, மிக முக்கியம் வாய்ந்த ஒன்றாக அமைந்து விட்டது. கணனி இன்று பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள், நூல் நிலையங்கள், அலுவலகங்கள், வைத்தியசாலைகள், வங்கிகள், நீதிமன்றங்கள், தனியார் கடைகள் ஏன் வீடுகளிலும் நாம் இன்று காணக்கூடியதாக இருக்கின்றது.

### கணனி என்றால் என்ன?

கணனி என்பது ஒரு மின்னனுவியல் சுற்றில் பல்வேறு பாகங்களின் தொகுப்புக்கள் கொண்ட ஓர் இயந்திரம். அது எந்தக் கணக்கியல் மற்றும் தர்க்கவியல் செயற்பாடுகளையும் விரைவிலும், எளிதிலும் கையாள வல்லது. கையாளுவோர் கொடுக்கும் பணியினையும் துல்லியமாகவும், குறிப்பிட்ட காலகட்டத்திலும் முடித்துத்தரும் திறன் வாய்ந்தது. அது தானாகத் தவறு செய்யவோ, சிந்தித்தும், புதிய பாதையில் செல்லவோ இயலாது. ஆகவே கணனி தவறு செய்து விட்டது என்று கூற இடமேயில்லை. கணனி செய்யதாகக் கூறப்படும் தவறுகள் எதுவாக இருந்தாலும் அது மனிதன் கொடுத்த தவறான விவரங்கள் அல்லது தவறான கட்டளையின் அடிப்படையில் விளைந்தனவாகவே இருக்கக் கூடும்.

### கணனியின் சிறப்பியல்புகள்

**வேகம்:-** மனிதன் தானாக செய்து வரும் கணக்கீடுகளை, தர்க்கச் செயற்பாடுகளையும் தான் கணனியும் செய்கின்றது. ஆனால் கணனி அதிவேகமாகச் செயற்படுகின்றது. ஒரு மைக்ரோ செக்கண்டுக்கு ஒரு வினாடி பத்து லட்சத்தின் ஒரு பங்கு, ஒரு நாளோ செக்கன் என்பதோ ஒரு வினாடியில் நூறு கோடியில் ஒரு பங்கு கணக்கீடுகளை சாதாரண சிறிய கணனிகள் (Mini Computer) மைக்ரோ செக்கண்டிலும், பெரிய கணனிகள் நாளோ செக்கண்டிலும் செய்து முடிக்கின்றன.

**தானியக்கம்:-** கல்குலேடரால் நாங்கள் செய்யும்போது ஒரு தடவையும், நாம் கட்டம், கட்டமாக நிறுத்திச் செய்ய வேண்டும். ஆனால் கணனியில் நாம் செயலின் கட்டளையைப் பிறப்பிக்கப்பட்டவுடன், கம்பியூட்டர் படிப்படியாகப் பணியாற்றி முடிவினை எமக்குத் தருகின்றது. இடையில் நாம் தலையிட்டு உத்தரவு பிறப்பிக்கத் தேவையில்லை.

**பல்திறன்:-** கணனி பல்திறன் கொண்டது. அதன் பயனீடுகளுக்கு எல்லையே இல்லைப்போல் தோன்றும். நிதியகணக்கியற் பிரச்சினைகள் கணனி எளிதில் தீர்த்து விடும். ஆகவே வங்கிகள், மருத்துவ நிலையங்கள், தொழிற்சாலைகள், உணவகங்கள், பல்கலைக்கழகங்கள், தனியார் கடைகள், விற்பனை நிலையங்கள், பாடசாலைகள், தபாற்கந்தோர்கள், ஆலயங்கள், நூல் நிலையங்கள் போன்ற இடங்களில் உரிய வகையில் கணனியைப் பயன்படுத்த இயலும்.

**களைப்பின்மை:-** கணனிகள் களைக்காது தன் பணியைச் செய்கின்றது. மனிதன் ஒரு வேலையைத் செய்யும்போது களைப்படைந்து விடுகின்றான். ஆனால் கணனி களைக்காது தனது பணியைச் செய்கின்றது.

**நம்பகமும் துல்லியமும்:-** கணனி மிகவும் நம்பகமானதும் துல்லியமான விடயங்களையும் தரவல்லது. மனிதன் 1000 தவறுகளைச் செய்கின்றான். ஆனால் கணனி ஒரு நொடியில் பல லட்சம் பணிகளைச் செய்யும். கணனி ஒரு தவறும் செய்வதில்லை. அது தேய்வதோ மாறி இயங்குவதோ இல்லை. ஆகவே அது எந்தத் தவறும் செய்வதில்லை. எதிர்பார்த்த முடிவு கணனியில் இருந்து கிடைக்கவில்லை என்றால் நாம் கொடுத்த விவரங்கள், வடிவமைப்புகள், திட்டத்திலோ ஏதோ தவறிருக்கிறது என்றே பொருள். விவரங்களும் அறிவுரைகளையும் சரியாக அளித்தால் சரியான விடைகளைப் பெறலாம்.

**நினைவாற்றல்:-** ஒரு கணனி நினைவு அலகு மிகுந்த நினைவாற்றல் கொண்டது. ஒரு கணனி 254 கோபைட் முதல் ஒரு கெகாபைட் வரை நினைவுகளைத் தக்கவைத்துக் கொள்ளும் திறன் கொண்டதாகும். இதன் மூலம் கணனி நினைவாற்றல் எத்துணை பெரிது எனப் புரியும்.

**திட்டமிடக் கூடிய தன்மை:-** ஒரு திட்டத்தை அளித்தவுடன் அதற்கேற்ப செயற்படக்கூடிய கணனி அத்திட்டத்தை நினைவில் வைத்து பின்னர் தேவைக்கு ஏற்ப பயன்படுத்தக்கூடியது. திட்டமிட்ட பின் எத்தனை முறைகள், எப்பொழுது வேண்டுமானாலும் கணனி மூலம் செயல் பெறலாம்.

**கணினியின் திறன்:-** அடிப்படை இயக்கம், கூட்டல் கணக்கு முடிவுகளைச் சேர்த்து வைத்துக்கொள்ளும். இலகுவான முறையால் இதனால் [illegible] கவும் வரைபட[illegible]லும். அவற்றிற்கான எந்திர மொழியில் மொழி பெயர்த்துக் கொடுக்கப்பட்டால் எண்ணில்லாத சந்தேகங்களைக் கண்டு கொள்ளவும் இதனால் இயலும். எண்களைக் கையாடுவதில் இதற்குள்ள அதிவேகம் எண்ணில்லா விவரங்களைக் கண்டு கொண்டு கையாடும் திறன் ஆகியவற்றால் வர்த்தகக் கணக்குகள், பட்டியல், புள்ளிவிவர ஆய்வு, வரவு, செலவு, பதிவு ஆகியவற்றிற்கு இது பெரிதும் பயன்படுகிறது.

**திறன் வகைப்பாடு:-** கணனிகளின் செயற்படுதிறன், வேகம், நினைவு, கொள்ளாற்றல் ஆகியவற்றை ஒட்டி கணனி வகைப்படும். சி.பி.யு என்னும் சென்ரட் பிராசசிற் யூனிட் எனும் மையச் செயல்பாட்டு அலகு பொதுவாக இவ்வகைப்படுத்தியே நிர்ணயிக்கின்றன. சி.பி.யு என்பது நினைவு அலகு, கணக்கீட்டு அலகு மற்றும் கட்டுப்பாட்டு அலகு கொண்ட தொகுதியாகும்.

**கணனிகளில் தரம்:-** மினி கணனி, சூப்பர்மினி கணனி, மெயின் பிறேம் கணனி அல்லது மிடி கணனி, சூப்பர் கணனி எனப் பலரகம் உண்டு.

வருங்காலத்தில் கணனிகள் 5 ஆம் தலைமுறை கணனிகள் உருவாக்கும் முன்னரே ஜப்பான், ரஷியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் 6 ஆம் தலைமுறை கணனி பற்றிப் பேசப்படுகின்றது. மனித முனையில் காணப்படும் அறிவுரைகள் சிலவற்றைக் செய்கை முறையில் உருவாக்கி அவற்றின் துணையோடு இயங்கும் தன்மை கொண்டதாக இவை உருவாகலாம். ஆகவே மனித மூளை

**திருமதி ராஜநாயகி கதிர்காமநாதன்**
**[B.A.Dip-in-Computer (Canada)]**

போன்ற தூய அறிவு கொண்ட, ஆனால் அதை விட பன்மடங்கு வேகமாக இயங்கும் எந்திரம் ஒன்றை நாம் விரைவில் காணக்கூடும்

### தொழில் நுட்ப முன்னேற்றங்கள்

(1) **விவரம் பரிமாற்றம்:-** தொலைபேசி, மைக்கிரவேவ் சாதனங்கள், சற்றலையிற் ஆகிய விவரம் பரிமாற்றங்கள் இன்று வளர்ச்சியடைந்த நாடுகளுக்குப் பொருந்தும். ஒவ்வொரு நிறுவனத்தின் ஒவ்வொரு கணனியும் தலைமையகக் கணனிக்கு வெகு விரைவில் விவரங்களைக் கொடுக்கும்.

**கணனியின் முன்னேற்றம்:-** கணனி தொழில் நுட்பத்தை விட, கணனி பயன்படுத்த வேண்டிய முன்னேற்றம் அதிகம் கணனி பயன்படுத்தும் ஆற்றல் கீழ் காணும் மனித ஆற்றல்களைப் பொறுத்தது. பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் (சிஸ்டம் அனாலிசிஸ்) அவற்றின் தீர்வுகளுக்கான முறைகளை கடத்தல் (சிஸ்டம் டிசைன்) மற்றும் கணனி மொழிக்கேற்ப பிரச்சினைகளை வடிவமைத்தல் (புரோகிராமிங்) இவ் மூன்றும் முன்னேறிக் கொண்டு இருந்தலும் கணனியின் தொழில்நுட்ப முன்னேற்றத்தைவிட குறைந்த அளவிலேயே அவை முன்னேறுகின்றன. இவற்றில் புரோகிராமிங் எனும் திட்டமிடல் தான் அதிக முன்னேற்றத்திற்கு வாய்ப்புள்ளது.

### பயன்பாடுகள்

வீட்டிலும் கணனியைப் பயன்படுத்தும் செயல்களும், வாய்ப்புக்ளும் அதிகரிக்கக் கூடும். தொலைபேசியில் பதிலளித்தல் வீட்டுப் பொருள்கள், உணவு ஆகியவற்றைக் கணக்கெடுத்தால், வானொலி, தொலைக்காட்சி, ஆகியவற்றைத் திட்டமிடல், வீட்டைச் சுத்தம் செய்தலை மேற்பார்வையிடல், வீடடுப்பட்டியலைச் சரிபார்த்தல், பணம் கட்டுதல், வருமான வரியைக் கணக்கிடல், சிறுவர்களுக்கு வீட்டுப் பாடத்தில் துணை போதல், சிறுவர்களுக்கான Games போடல், பொழுது போக்கல், வர்த்தக காரியங்களுக்கு வேண்டிய பொருள்களை அடக்கிய பட்டியலை அனுப்புதல், ஆகிய பணிகளையும் செய்யக்கூடிய சில பணிகளாகும்.

சாலை வாகனங்களில் அவை பயண வேகம், கட்டணம், ஆகியவற்றைக் கணக்கிடவும், அபாயத்தைக் கண்டு ஒலி - ஒளிக் குறிப்புக் கொடுக்கவும் செல்லும் திசையினைக் கட்டுப்படுத்தவும், பயன்படக் கூடும். வாகன ஊர்திகளில் அவை திசை கண்டு செல்வதற்கும் இடையில் பறப்பதை திட்டமிடவும், தரையிறங்குவதையும், விண்ணிலே அவற்றைக் கட்டுப்படுத்தவும் பயன்படுத்த வாய்ப்புகள் உண்டு. மருத்துவம் கட்டடம் ஆகிய தொழில்துறைகளில் அவை பெருமளவில் பயன்படுத்த வாய்ப்புகள் உள்ளன. கடினமான கணக்கீடுகளுக்கு மக்கள் தொலைபேசி மூலம் கணனிகளை அணுகக்கூடும். கணனி மனிதன் கையிலுள்ள ஒரு கருவியாகும். மனிதன் எவ்வாறு திட்டமிட்டு அதனைப் பயன்படுத்துகிறானோ அதற்கேற்பவே அதனால் பயனளிக்க இயலும். மனிதன் தவறுகளுக்கு கணனிகளைக் குறை கூறிப் பயனேதுமில்லை. வேலை இடங்களில் ஒருவர் பண்ணிய விடயங்களை வேறு ஒருவர் சரி பிழை பார்க்க இருப்பார்கள் எனவே மனித தவற்றைக் குறைத்துக் கொள்ளலாம். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பாட்டி அ.த.க. வித்தியாலய அதிபர் உயர்திரு. கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் அவர்களின்

# பொன்விழாச் சிறப்புமலர்

### வாழ்த்துச் செய்தி



திருமருவும் தீவகத்தின் கல்வியின்
திருவிளக்கே!
பாடசாலையின் கருவுருவாம்
அருமறையின் கலங்கரையே!
இம் மானிலத்தில் எப்போதும்
இறையன்பால் உருகி நின்று!
இதய சுத்தியுடன் கல்வி வேதம் இயம்பிய
அளவில்லாப் புகழ் ஆசிரிய மணியை

புகழ்ந்தேத்தி முத்துமாரியம்மன் பிரதமகுரு- இன்று
பெருமையுடன் பொன்விழா புகழாரம் சூட்டி- பின்னும்
பெரிது உவந்து வாழ்த்தெடுத்து போற்றுகின்றேனே!

பொன்விழாக் காணும் பொன்னான நாயகனே!
எடுப்பான தோற்றமதில் ஏற்றமிகு வாழ்வுமங்கே!
மிடுக்கான மாட்சி மிளிர்கின்ற காட்சி மெய்த்தகையாம்
மெய்யன்பாய் மெருகூட்டும் அத்தனையும் ஆற்றாது அறை செய்வரசே!

பொன் விழா பவனிதனை தீவக குழாம் பற்றுடனே
பாங்காக பார்த்திருந்து போற்றுகின்ற பெறற்கரிய பெரும்
பிறவிதனைக் கொண்ட புகழ் பெற்றோய்- கல்வியின் திருவிளக்கே!
நீ வாழி வாழி நீடூழி வாழி!
பொன் விழாவின் பொன்னான சுந்தரனே!
இவ்வுலகில் என்றும் பொன்னாக வாழ்வீர்!

**செல்வ. விமலராஜக் குருக்கள்,** தம்பாட்டி தேவஸ்தானம்.

### உம் பணி வாழி!



கடலலை தாலாட்டி- கற்பகம் பசி
போக்கும் காவலூர்ப் பதியினிலே
கலைவளம் கொஞ்சி நல்கடல் வளம்
மிஞ்சிடும் கவின் மிகு தம்பாட்டியில்
கலையுடன் கல்வியை திறமுடன் தந்திடும்
நிலையத்தின் அதிபதியாய்
அரும்பணி செய்திடும் அதிபரே!
உன் பொன் அகவை நிறைவில்....!!

எம் கல்லூரித் தாயிடம் காலூன்றி வேர் விட்டு விழுதாகிப் பணி செய்த முன்னாள் ஆசானே! இடைவெளி இல்லாத இளைப்பாறாத யுத்தமும் அடிக்கடி மாறும் அரசியல் மாற்றமும் கல்விப் புலத்தில் தாக்கத்தை ஏற்படுத்த ஊசி வழி நூல்போல் ஆட்சியுடன் அணி கோர்த்து அடிக்கடி மாறி வரும் பாடவிதான மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து சவால்கள் நிறைந்த யாதார்த்தத்தில் அதிபராய்ப் பணிபுரிவதென்பது மிகவும் இயலாதொரு விடயம்.

இப்பணியை செவ்வனே நிறைவேற்றும் தாங்கள் அத்துறையில் மட்டுமன்றி ஆலயப் பணிகளிலும் கிராமத்து வளர்ச்சியிலும் தீவிர நாட்டம் காட்டி வருவதையும் மாணவ சமூகத்தில் பாசமுள்ள தந்தையாய் பவனி வருவதையும் எண்ணிப் பார்க்கையில் ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற மகுட வாக்கிற்கே மகுடமாய் இருப்பதை எண்ணி என்னுள்ளம் பேருவகை கொள்கின்றது.

**Rev.Fr.J.A.Jesuthas,** Rector
J/St.Antony's College, Kayts, Sri Lanka.



**கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம்** சின்னாலடி, தங்கோடை, காரைநகர்.

| | |
|---|---|
| பிறந்த திகதி: | 02.06.1958 |
| முதல் நியமனம்: | 21.03.1979 |
| முதல் நியமனத்தின் வகை: | கணிதம் |

### சேவை விவரம்

| | |
|---|---|
| இ/ஒப்பாத்த இல:- 02 அ.த.க. வித்தியாலயம் | 21.03.1979 - 15.03.1981 |
| இ/ஒப்பாத்த இல:- 01.அ.த.க. வித்தியாலயம் | 16.03.1981 - 17.01.1982 |
| யா/ஆசிரியர் பயிற்சிக் கலாசலை | 18.01.1982 - 31.12.1983 |
| யா/புனித அந்தோனியார் கல்லூரி | 01.01.1984 - 02.03.1997 |
| யா/தம்பாட்டி அ.த.க.வித்தியாலயம் (அதிபர்) | 03.03.1997 - இன்றுவரை |

ஆரம்பக்கல்வி:- யா/யாழ்ற்ரன் கல்லூரி ஆரம்ப வித்தியாலயம்
உயர் கல்வி:- யா/யாழ்ற்ரன் கல்லூரி, யா/கலாநிதி தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்,யா/கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி (மின்சார பொறியியல்)

காரைநகர் மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்பாள் ஆலய நேர்த்திருப்பணிச்சபை,பொருளாளர்.

### செயற்றிறன் மிக்க அதிபர்



தம்பாட்டி அரசினர் தமிழ்க்கலவன் வித்தியாலய அதிபரும் அன்புக்குரிய நண்பருமாகிய திரு.க. சுந்தரலிங்கம் அவர்கள் பொன்விழாஆண்டில் தடம் பதிப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. ''சுந்தா'' என்று எங்களில் பலரால் அழைக்கப்படுபவர். 1989 இல் இருந்து இவருடன் பழகும் வாய்ப்புக்கிடைத்தது. ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் ஆசிரியராக இருந்து அதிபர் பதவியை இப் பாடசாலையில் வகிக்கத் தொடங்கினார்.

செயற்றிறன் மிக்க, துடிப்புள்ள, எதையும் பொறுப்பு எடுத்துச் செய்யக்கூடிய பன்முக ஆற்றல் வாய்க்கப் பெற்றவர். தீவக மட்டச் செயற்பாடுகளில் பல காலமாகதமது காத்திரமானபங்களிப்பை நல்கி வருபவர். தம்பாட்டிப் பாட சாலைய மீள ஆரம்பிக்கும் போது அதிபர் பதவிக்கு பொருத்தமானவராக இனங்காணப்பட்டு இவரது பெயர் சிபார்சு செய்யப்பட்டது. இவரது பணி காத்திரமானதாக அமைந்ததை இப்போது எல்லோரும் அறிவார்கள்.

எடுத்த காரியம் எதுவாக இருப்பினும் ஓய்வின்றிக் கடுமையான அர்ப்பணிப்புடன் உழைப்பவர். உதவுவதில் முன்னிற்பவர். இவரும் இவரது குடும்பத்தினரும் எல்லா வளமும் பெற்றுச் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றேன். வாழ்க! வளர்க! உயர்க!

**பொ. அருணகிரிநாதன்,**
முதல்வர்,யா/வேலணை மத்திய கல்லூரி.

### பிரச்சினைகளைக் கண்டு அஞ்சாதவர்



''.....அன்னயாவிலும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கெழுத்தறிவித்தல்'' என்பார் பாரதியார். ''ஆசிரியர்கள் பிறக்கின்றார்கள் உருவாக்கப்படுவதில்லை'' (TEACHERS ARE BORN NOT MADE) என்பர் கல்வியாளர். ஆசிரிய நண் பர் திருவாளர் கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் அவர்களும் முதற்சொன்ன வர்க்கத்திலடங்குவர். தலை சிறந்த முதல் நிலை முகாமையாளர்.

தம்பாட்டி அ.த.க வித்தியாலயம் எழுபது, எண்பதுகளில் ஊர்காவற்றுறைக் கல்வி வட்டார உடற் பயிற்சிப் போட்டி நடைபெற்று முடிந்ததும் அங்கு நடுநிலை வகித்த உத்தியோகத்தர்களுக்கு விருந்துபசாரம் வழங்கும் அமுதசுரபியாக திகழ்ந்தவர்.

ஆனால் இன்று அதன் கல்விப் பரிமாணம் பௌதீக வளங்கள் பல்துறைசார்ந்த வளர்ச்சிப் படிகள் தாண்டி உன்னத நிலைமைக்கு உயர்ந்து வந்துள்ளது. முதல்வர் சுந்தரலிங்கம் செயற்றிறனையே எடுத்துக் காட்டுகின்றது.

இவர் குடும்பத்துடன் சகல பாக்கியங்களும் பெற்று நீடூழி காலம் வாழ வேண்டி நயினை நாகபூஷனித் தாயை இறைஞ்சுகின்றேன்.

**இ. சிவபாதசேகரம்** SLPS-2-1, B.A., Dip. in Ed.

### கல்விப் புலத்தில் பெரும் மதிப்புப் பெற்றவர்



தம்பாட்டி அ.த.க.வித்தியாலய அதிபர் திரு.க.சுந்தரலிங்கம் அவர்களின் பொன்விழா 03.06.2008 இல் நடைபெறவிருப்பதையிட்டுப் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

அதிபர் பொறுப்பை ஏற்றகாலத்திலிருந்து பாடசாலையின் அபிவிருத்திப் பணியிலும் மாணவர்களின் கல்விக்கான வளங்களைத் தேடிப் பாடசாலைக்கு உரித்தாக்கிய பணியிலும் மிகவும் உன்னதமான சேவையை ஆற்றியிருப்பதும் நாமனைவரும் அறிந்த ஒன்றே.

பாடசாலைச் சூழல் சமூகத்துடனும் சிறந்த தொடர்புகளைக் கொண்டவராகவும் அச்சமூகத்தினரின் உயர்விற்காக தனது சேவையை விரிவுபடுத்தியவராகவும் தொழிற்பட்டுவருகிறார். இவரது சேவை மென்மேலும் சீர்பெற்று சிறந்து விளங்க பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்தி அமைகின்றேன்.

**ஜி.வி.இராதாகிருஷ்ணன்,** வலயக் கல்விப் பணிப்பாளர் (பதில்),தீவகம்.

### மனந்தளராது பணியாற்றுபவர்



சேவையால் உயர்ந்து சீரிய சிறப்பினைப் பெற்று மக்கள் மனதில் அழியா இடம் பெற்றுள்ள எங்கள் பாடசாலை அதிபர் திரு.க.சுந்தரலிங்கம் அவர்கள் அகவை ஐம்பதைப் பூர்த்தி செய்து பொன்விழாக் காணும் செய்தியறிந்து மிக மிக மகிழ்கின்றேன்.

மூன்று தசாப்த காலமாகக் கல்விப் பணியே தம் தலையாய பணியெனக் கொண்டு செயற்படும் செயல் வீரராவார். பல்வேறு நெருக்கடிகளின் மத்தியிலும் மனம் தளராது மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்துவததையே குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றிவரும் அதிபரவர்கள் பொன் விழாக் காண்பது எமது பாடசாலையின் வரலாற்றிலும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும் ஒரு நிகழ்வாகவே கருதுகின்றேன்.

அதிபர் அவர்கள் பல்லாண்டு தம் பணியில் சிறந்தோங்கவும் வளமுடன் வாழவும் எல்லாம் வல்ல இறைவனை இவ்வேளையில் இறைஞ்சுகின்றேன்.

**திருமதி க.விக்கினேஸ்வரன்** முன்னாள் உப அதிபர்.

### பல்துறைப் பணியாளன்



யா/தம்பாட்டி அ.த.க.பாடசாலை அதிபர் திரு.க.சுந்தரலிங்கம் அவர்கள் தனது ஐம்பதாவது அகவையைப் பூர்த்தி செய்து பொன்விழாக் காணுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

தற்துணிவு மிக்க முகாமையாளராகத் திகழும் இவர் பல்துறை ஆற்றல் மிக்க நல்லாசானாகத் திகழ்கிறார்.

சமயப்பணி, சமூகப்பணி, கல்விப்பணி என பலதுறைகளிலும் அர்ப்பணிப்பு மிக்க நற்சேவையாளனாக தன்னை அர்ப்பணிக்கும் இவரது எதிர்காலம் மேன்மேலும் சிறப்புற வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டி, வாழ்த்தி நிற்பதில் மனநிறைவு கொள்கின்றேன்.

**ச.பாஸ்கரன்,** கோட்டக் கல்வி அலுவலர், ஊர்காவற்றுறை.

### உள்ளத்தால் உயர்ந்த உத்தமன்



என் நெஞ்சிற்கு நெருக்கமான நண்பன் கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம். அவருடைய பொன்விழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவருடன் 30 வருடங்களாக பழகும் சர்ந்தர்ப்பம் கிடைத்தது. தீவகத்தில் ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றும் இவ் வேளையில் எந்தப் பிரச்சினைகளையும் தொழிற்சங்கத்தின் மூலம் அணுகி அதன் மூலம் தீர்வை பெற்று தொழிற்சங்கத்திற்கு என்றும் உறுதுணையாக திகழ்ந்தவர். அத்துடன் நின்று விடாது தமது கிராமத்தில் சைவத்தையும், தமிழையும் வளர்க்க வேண்டும் என்ற ஆவர்த்துடன் ஆலயங்களில் முக்கியமான பதவிகள் வகித்து அளப்பரிய சேவை செய்து வருகின்றார்.

இவர் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடுழிகாலம் சிறப்புடன் வாழ இன்றவனை பிரார்த்திக்கின்றேன்.

**எஸ்.கே.சண்முகலிங்கம்** J.P.,செயலாளர், இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம், தீவகம்.

### அயற்பாடசாலைகளிலும் அக்கறை மிக்கவர்



அதிபர் சுந்தரலிங்கம் அவர்கள் அகவை ஐம்பதினைக் கொண்டாடும் இந்த நல்ல நாளில் அவரை வாழ்த்துவதில் பேருவகையடைகின்றேன்.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக அதிகஷ்டப்பிரதேசப் பாடசாலையான தம்பாட்டி அ.த.க.பாடசாலை அதிபராக சீரிய பணியாற்றி வருகிறார்.

பாடசாலையின் பௌதீக வளங்களை நிறைவாக்குவதிலும் சமூக ஒத்துழைப்புடன் கல்வித்தர விருத்தியை மேம்பத்துவதிலும் வெற்றி கண்டுள்ளார்.

கோட்ட மட்ட, வலயமட்ட நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் இவர் அயற்பாடசாலை நிகழ்வுகளையும் சிறப்பிக்கும் வண்மை கைவந்தவர்.

இவர் பல்லாண்டு காலம் குடும்பத்தினருடன் வாழ மணற்காடு முத்துமாரி அம்பிகையின் பாதார விந்தங்களைப் பிரார்த்திக்கின்றேன்.

**ப.விக்னேஸ்வரன்,** வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்.

### மாணவரின் உயர்வுக்கு உழைப்பவர்



காரையூர் பெற்றெடுத்த பண்பாளராம் திரு.க.சுந்தரலிங்கம் அவர்களின் பொன் விழாவையொட்டி வெளியிடப்படுகின்ற மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

பாடசாலையின் கனவுகளை, கிராமத்தின் கனவுகளை நிதானமாக்கி தனது மாணவர்களின் உள்ளத்தில் உண்மை ஒளியுடன் நிறைந்த பணிகளை எமது பாடசாலையில் 12 வருடகாலமாக ஆற்றி வருகின்றார்.

மாணவர்களது அறிவுக்கண்ணைத் திறந்து அவர்களை உயர்நிலையில் வைத்துள்ள எமது அதிபரை நினைவு கூராமல் இருக்க முடியாது. தாம் பெற்ற அறிவையும் பயன்களையும் வருங்காலச் சந்ததியினரும் பெற்று உயர வேண்டுமென தம்மாலான உதவிகளை வழங்கி உதவுபவர்.

சக ஆசிரியர்களை தமது சகோதரர்களாக நடத்தும் எமது அதிபரின் உயர்ந்த உள்ளம் பாராட்டுவதற்குரியதாகும். பாடசாலை மாணவர்களை தன்பிள்ளைகளாக எண்ணி அவர்கள் அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறக்க அவர் கூறும் அறிவுரைகள் மனம் கவரத்தக்கவை.

இத்தகைய நல்லதோர் உள்ளம் படைத்த எமது அதிபர் நீண்டகாலம் மனைவி, மக்களோடு சீரும் சிறப்புமாக வாழ்ந்து பாடசாலைக்கும் மாணவச் செல்வங்களுக்கும் நல்வழிகாட்டிட எல்லாம் வல்ல ஸ்ரீ முத்துமாரி அம்மன் அருள்புரிய வேண்டி நிற்கின்றேன்.

**திருமதி சிவதர்சினி காண்டீபன்,** உப அதிபர், யா/தம்பாட்டி அ.த.க.வி.

### தனக்கெனத் தனியிடம் பிடித்தவர்



ஐம்பதாவது, அகவை நிறைவு செய்யும் தம்பாட்டி வித்தியாலய அதிபர் திரு.கணபதிப்பிள்ளைசுந்தரலிங்கம் அவர்களை சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென அகமகிழ்ந்து வாழ்த்தி நிற்கின்றேன்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபராகப் பணி நியமனம் பெற்ற காலத்திலிருந்து அதிபர் அவர்களை நான் நன்கு அறிவேன்.

சிறந்த கற்பித்தலில் தனக்கெனத் தனியிடத்தைத் தக்க வைத்துக் கொண்ட அதே நேரம் பாடசாலை அதிபராக இருந்து மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அதிக அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனும் செயலாற்றுகின்ற தன்மை பாராட்டப்படவேண்டியதாகும்.

அனைவருடனும் அன்பாகவும்,பண்பாகவும், நேர்மையாகவும் பழகும் தன்மை உடையவர்.

''வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்தனைய துயர்வு'' என்ற வள்ளுவர் வாக்குக்கமைய இமயம் போல செயற்றிறன் கொண்டு மாணவ சமுதாய மேம்பாட்டிற்கு உழைக்கும் அதிபர் காலத்தால் மறக்க முடியாதவர்.

அகவை ஐம்பதை கொண்டாடும் அதிபர் அவர்களின் கல்விப்பணி மேன்மேலும் தொடர்ந்து பாடசாலை வளர்ச்சிபெற எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

**கே.ஸ்ரீ மோகனன்,** உதவி அரசாங்க அதிபர், தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை.

### பொன்விழா நாயகனே வாழியவே!

எமது பாடசாலையில் கடந்த 12 வருடங்களாக அதிபராக சேவையாற்றிக் கொண்டிருக்கும் திரு.க. சுந்தரலிங்கம் அவர்கள் இன்றைய நன்னாளில் அகவை 50 கண்டு பொன்விழாக்காணுவதையிட்டு எமது அதிபரை பாராட்டி வாழ்த்துவதில் ஆசிரியர்களாகிய நாங்கள் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

எம்முடன் கடமை உணர்வுடன் பழகும் அதே நேரம் எமக்கு ஏற்படும் இன்னல்களையும் எதிர்கொண்டு அதற்கான தீர்வையும் பெற்றுத் தந்து எம்மை வழிப்படுத்துவதில் அவருக்கு நிகர் அவரே என்பதில் ஐயமில்லை.

எங்களது சேவைக்காலப் பகுதியில் இந்நிகழ்வு நடைபெறுவதை இட்டு எமது உள்ளம் பூரிப்படைகிறது.

எமது பாடசாலை வரலாற்றில் பொன்விழாக் காணும் முதல் அதிபர் எமது அதிபரே என்று கூறிக்கொள்வதில் நாம் பெருமை அடைகின்றோம்.

பூவோடு சேர்ந்த நாரும் சொர்க்கம் சேர்ந்ததாம். அதுபோல இந்த நாளில் எமது பாடசாலைச் சமூகம் வெளி உலகில் புகழ்பரப்புவதையிட்டு பெரும் உவகை அடைகின்றோம்.

இன்றைய வரலாற்று நிகழ்வில் ஏற்படும் அகமகிழ்ச்சியானது என்றென்றும் மணம் வீச எமது வாழ்த்துக்கள்.

மேலும் பல விழாக்களைக் கண்டு எமது பாடசாலைக்கும் ஆசிரியர் சமூகத்திற்கும் சேவையாற்ற வேண்டும் என்று எல்லாம் வல்ல தம்பாட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மனை வேண்டி எமது உள்ளம் நிறைந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் குழாம்,** யா/தம்பாட்டி அ.த.க.வித்தி.

### தம்பாட்டி அ.த.க.வித்தியாலய அதிபர் பேராசான் திரு.கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் அவர்களுக்கான "பொன் விழா" வாழ்த்துகள்

அகவை ஐம்பது பூர்த்தியாகி.... அவையாம் எங்கள் பள்ளி அரங்கதனில்
உவகை பொங்க பொன் விழக்காணும்
தகைமை சேர் தலைமை ஆசான் அதிபர் அவர்களின்
ஆற்றலொடு ஆளுமையும்... போற்றத்தகு பண்பும்
சீற்றமில்லா சீரிய குணமும் ஏற்றமுயர் நன் நேர் நடையும்
தாற்பரிய சான்றுகள்!!! புன்னகை சேர் பொன்விழா நாயகனே!

நன்வளம் கொழிக்கும் காரை தங்கோடை மண்ணில் தோன்றி
தன்னிகரில்லா ஆசானாய், அதிபராகி அன்புக் கற்பித்தல் வழியில்...
பன்னிரு வருடங்கள் தன்னுயர் சேவையாற்றி பொன்விழா காணும் பூர்வீக நாயகனுக்கு....
இன்னருள் சுரக்கும் எங்கள் மாரியம்மா! உன்னருளால் அவர் பொன்விழாக் கண்டு
இன்னும் பல பதவி உயர்வுகளும் புகழும் பெற்று தன்னிறைவடைய வேண்டுமென
[illegible] வாழ்க பல்லாண்டு.

**தம்பாட்டி வாழ் மக்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப்பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதிப்போட்டியில் அராலி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையும் சங்கானை சிவப்பிரகாசம் மகாவித்தியாலயமும் மோதிக்கொள்வதையும் -
சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய கரப்பந்தாட்ட வீராங்கனைகள், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளருடன் காணப்படுவதையும் படங்களில் காணலாம்.

# மாவட்ட மட்டத் தடகளப் போட்டிகளில் வலிகாமம் வலயத்துக்கு கூடுதல் இடங்கள்

வலி.வடக்கு,ஜூன்2

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற தடகளப் போட்டிகளில் வலிகாமம் கல்வி வலயம் அதிகூடிய இடங்களைப் பெற்றுள்ளது.

56 முதலாம் இடங்களையும் 51 இரண்டாம் இடங்களையும் 40 மூன்றாம் இடங்களுமாக மொத்தம் 147 இடங்களை வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளிலும் முதல் மூன்று இடங்களையும் கூட தெல்லிப்பழை கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மற்றும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் பெற்றுக் கொண்டுள்ளன.

வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட கோட்டங்கள் ரீதியில் தெல்லிப்பழைக் கல்விக்கோட்டம் 37 முதலாம் இடங்களையும் 27 இரண்டாம் இடங்களையும் 19 மூன்றாம் இடங்களுமாக மொத்தம் 83 இடங்களையும் -

சண்டிலிப்பாய் கல்விக்கோட்டம் 10 முதலாம் இடங்களையும் 12 இரண்டாம் இடங்களையும் 08 மூன்றாம் இடங்களுமாக மொத்தம் 30 இடங்களையும் -

சங்கானை கல்விக்கோட்டம் 06 முதலாம் இடங்களையும் 09 இரண்டாம் இடங்களையும 09 மூன்றாம் இடங்களுமாக மொத்தம் 24 இடங்களையும் -

உடுவில் கல்விக்கோட்டம் 03 முதலாம் இடங்களையும் 03 இரண்டாம் இடங்களையும் 04 மூன்றாம் இடங்களையும் பெற்று மொத்தம் பத்து இடங்களை மட்டும் பெற்றுக்கொண்டுள்ளன. (1-86)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,ஜூன்2

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் அங்கத்துவ கழகங்களுக்கிடையே நடத்திவரும் வலைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் ஆட்டங்கள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (1-86)

* * *

கரவெட்டி,ஜூன்2

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் டயமன்ஸ் வி.கவும் நவசக்தி வி.கவும் மோதுகின்றன. (1-70)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# விசேட தேவையுடைய மாணவர் போட்டி: வாழ்வகம் கிண்ணத்தைச் சுவீகரித்தது



யாழ்ப்பாணம்,ஜூன்2

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட விசேட தேவையுடைய மாணவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட மெய்வன்மைப் போட்டிகளில் வாழ்வகம் முதலிடம் பெற்று வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்தது.

வலிகாமம் கல்வி வலய விசேட கல்விப் பிரிவு நடத்திய மெய்வன்மைப்போட்டி சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் உதவிக்கல்விப்பணிப்பாளர் சி.மா.தவகுமாரன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வுக்கு வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த 47 பாடசாலைகளிலிருந்தும் 376 விசேட தேவையுடைய மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

சிவபூமிப் பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்பும் ஆர்க் பாடசாலை மாணவர்களின் உடற்பயிற்சிக் கண்காட்சியும் வாழ்வக மாணவர்களின் இசையும் அசைவும் சிறப்பு நிகழ்வாக கைதடி நவீல்ட் பாடசாலை மாணவிகளின் உடற்பயிற்சியும் பார்ப்போர் மனங்களை நெகிழவைத்தது. தங்களாலும் ஏனைய மாணவர்கள் போலச் செயற்படமுடியும் என்பதை நிரூபித்துக்காட்டியுள்ளனர்.

தடகள விளையாட்டுகளாக ஓட்ட நிகழ்வுகளும் குண்டெறிதல், தட்டெறிதல், ஈட்டியெறிதல், பந்தெறிதல், நின்று நீளம் பாய்தல் என கீழ்ப் பிரிவு, மேற்பிரிவுகளாக நடத்தப்பட்டன.

இப்போட்டிகளில் முத லாமிடம் பெற்ற சுன்னா கம் வாழ்வகம் விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர் எஸ். நாகரட்ணம் அன்பளிப்புச் செய்த வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இரண்டாமிடத்தை கோண்டாவில் சிவபூமிப் பாடசாலையும் மூன்றாமிடத்தை உடுவில் ஆர்க் பாடசாலையும் பெற்றுக் கொண்டன. வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வெற்றிக்கிண்ணங்களும் பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டதுடன் பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சிகளில் மாணவர்கள் மிகுந்த உற்சாகத்துடனும் மகிழ்வுடனும் பங்குபற்றித் தமது திறன்களை வெளிக்காட்டியிருந்தனர்.

வலிகாமம் கல்வி வலய விசேட கல்விப் பிரிவுக்குப் பொறுப்பான ஆசிரிய ஆலோசகர் நி.முருகானந்தனின் இவ்வாறான செயற்பாடுகளுக்கு சகல சமூகத்தினரும் தமது பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

யாழ்.மாவட்டத்தில் எந்த வலயமும் முன்னெடுக்காத செயற்பாடுகளை வலிகாமம் கல்வி வலய விசேட கல்விப்பிரிவு செய்து வருவது குறிப்பிடத்தக்கது. (1)

# ஜொலீஸ்ரார் சுற்றுப்போட்டியில் அரியாலை மத்தி வென்றது

வலி.வடக்கு,ஜூன்2

யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஈ.எஸ்.பேரம்பலம் சக நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய விலகல் முறையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி காலிறுதி ஆட்டமொன்றில் அரியாலை மத்தி விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் அரியாலை ஸ்ரான்லி விளையாட்டுக் கழகமும் அரியாலை மத்தி விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் 09 விக்கெட்டுகளை இழந்து 158 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

கஜதீபன் 36, செல்வராசா 29, தனுசன் 26 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

பிரதீபன் 06 ஓவர்கள் பந்துவீசி 16 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் குகதாஸ் 06 ஓவர்கள் பந்துவீசி 34 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் கவிந்தன் 06 ஓவர்கள் பந்துவீசி 18 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கௌரிபாலன் 03 ஓவர் கள் பந்துவீசி 22 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

159 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய அரியாலை மத்தி விளையாட்டுக் கழகம் 23.3 ஓவர்களில் 02 விக்கெட்டுகளை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்று வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

பிரதீபன் 89, ஆட்டமிழக்காது சிவாகரன் 47 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

துஷ்யந்தன் 04 ஓவர்கள் பந்துவீசி 28 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் ரஜனிகாந் 06 ஓவர்கள் பந்துவீசி 22 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

# தேசிய மட்ட கோலூன்றிப் பாயும் போட்டியில் அருணோதயா மாணவன் பதக்கம் பெற்றார்!



வலி.வடக்கு,ஜூன்2

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தினால் நடத்தப்பட்ட கனிஷ்ட பிரிவு விளையாட்டு வீர, வீராங்கனைகளுக்கான தடகளப் போட்டிகள் கொழும்பு சுகதாஸ விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன. கோலூன்றிப் பாய்தல் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவன் பதக்கம் பெற்றார்.

இப்போட்டியில் கலந்துகொண்ட அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவன் கோபாலன் கணதீபன் 21 வயதுப் பிரிவில் கோலூன்றிப் பாய்தலில் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

கடந்தாண்டும் பாடசாலை மட்டத்தில் இடம்பெற்ற தேசியப் போட்டியில் மற்றுமொரு மாணவர் கோலூன்றிப் பாய்தலில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து பலத்த வசதியீனங்களுக்கு மத்தியிலும் மாணவர்கள் கோலூன்றிப் பாய்தலில் தேசிய மட்டத்தில் 3ஆம் இடங்களைப் பெற்று வருவதை அடுத்து கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினார் கல்லூரிக்கு என ஒரு லட்சத்தி 10 ஆயிரம் ரூபா செலவில் கோலூன்றிப் பாய்தலுக்கான சர்வதேச தரப் போட்டிகளில் பயன்படுத்தப்படும் கோலொன்றை வழங்கியுள்ளார்கள்.

தற்போது கல்லூரியில் கோலூன்றிப் பாய்தலில் 15, 17, 19, 21 வயதுப் பிரிவினர்களுக்கான பயிற்சிகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.



இவர்களுக்கான பயிற்சிகளை செ.ராமணன், ஆசிரியர்களான பாகீஸ்வரன், சுபாஸ் ஆகியோரும் இணைந்து வழங்கி வருகின்றார்கள். (1-86)

# சாரணர்களுக்கு இடையிலான விளையாட்டு விழா விரைவில்!

யாழ்ப்பாணம்,ஜூன்2

இலங்கை சாரணர் சங்க கிளிநொச்சி தென்மராட்சி மாவட்ட சாரணர்களக்கான விளையாட்டு விழா விரைவில் நடத்தப்படவுள்ளது.

பங்குபற்றும் சாரணர்களின் விவரங்களை அனுப்பிவைக்குமாறு மாவட்ட ஆணையாளர் செ.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

குருளைச் சாரணர், சாரணர், துருப்பு பொது நிகழ்வு, சாரண தலைவர்கள், குருளைச் சாரணர் தலைவர்கள் ஆகியோரிடையே போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

சாரணீயம் இயங்கும் பாடசாலைகளுக்கு விளையாட்டு விழா தொடர்பான சுற்று நிருபம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (1-227)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 . 11 . 1951



மறைவு 25 . 05 . 2006

## திருமதி இராசாத்தி இராசலிங்கம் (பவளம்)


திதி:பூர்வபக்க திரயோதசி

பாசமென்னும் மழை பொழிந்து பக்குவமாய்
நாம்மிளிர பல வழி செய்த தெய்வமே!
இப்பாரினிலே நாம் மேலுயர தூய பல
சிந்தனைகள் விதைத்து வைத்தீர்!
ஆதலினால் நாம் உயர்ந்தோம்
எம் முயர்வு காணா உங்கள் உயிர் பிரிந்ததேனோ?
தேம்புகின்றோம் இன்றும் நாமே

தகவல்:
குடும்பத்தினர்,
தாவடி தெற்கு,
கொக்குவில். (74890) இ.கமலகாசன் (மகன் - பிரான்ஸ்)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 17 ⋆ 07 ⋆ 1930



உதிர்வு 03 ⋆ 05 ⋆ 2008

## சடையர் ஆறுமுகம்

திதி: திரயோதசி (02.06.2008)

மாதம் ஒன்று சென்றதப்பா எம்மைவிட்டு
நீங்கள் பிரிந்து
ஆறவில்லை உங்கள் பற்றிய நினைவு
ஆயிரம் உறவுகள் எம் அருகில் இருந்தாலும்
அவை அனைத்தும் உங்கள் அன்பிற்கு ஈடாகுமோ?

03.05.2008 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் சடையர் ஆறுமுகம் அவர்களின் வீட்டுக்கிருத்திய ஆத்ம சாந்தி நிகழ்வு இன்று (02.06.2008) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்,
கைதடி கிழக்கு,
கைதடி. (734867) மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பிள்ளையார் துணை

# நெஞ்சகலா நினைவலைகள்

20ஆம் ஆண்டு | முதலாம் ஆண்டு





அமரர் சுப்பிரமணியம் சின்னப்பு | திருமதி பொன்னம்மா சின்னப்பு

| | | |
|---|---|---|
| 01.11.1915 | தோற்றம் | 01.02.1917 |
| 13.09.1988 | மறைவு | 13.06.2007 |
| பூர்வபக்க துதியை (01.09.2008) | திதி | அபரபக்க சதுர்த்தசி (02.06.2008) |

எங்கள் முழுமுதற் தெய்வங்களே! பப்பா! அம்மா! நீங்கள்
ஈருடலும் ஓருயிருமாய் வாழ்ந்து எங்களிற்கு அன்பூட்டி
அறிவூட்டி எங்களை சமூகத்தில் நற்பிரஜைகளாக வாழ வைத்தீர்கள்.
எங்களிற்கு நல்வரன்களைத் தேடித் தந்து எங்களை
சொந்தக் காலில் நிற்க வைத்தீர்கள். இன்று எங்களைத் தவிக்க விட்டு
எங்கு சென்று விட்டீர்கள். என்றும் உங்கள் நினைவலைகளுடன் உங்கள்

*ஆத்ம சாந்திக்காக அச்சுவேலி உலவிற்குளம்*
*சித்தி விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.*

சி.பிரேமநாதன் (மகன்),
சி.அபூர்வசூரியா (மகன் - லண்டன்),
சி.சிவபாதம் (மருமகன் - லண்டன்),
க.குகனேஸ்வரன் (மருமகன்). (74968)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# வேலை வாய்ப்புக்குறித்து அமைச்சின் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 2

தொழில் வாய்ப்பு விடயமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களைச் சந்திப்பதற்கு அமைச்சரை யாழ்.அலுவலகத்திற்கு வருகை தருபவர்கள், தங்களது கோரிக்கைக் கடிதங்களுடன் சுயவிபரப் படிவத்தை மாத்திரம் கட்டாயமாகக் கொண்டு வரும்படியும் ஏனைய சான்றிதழ்கள் எதுவும் கொண்டு வரத் தேவையில்லை என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் ஏற்கனவே தொழில் வாய்ப்பு தொடர்பில் அமைச்சரின் யாழ். அலு வலகத்தில் தங்களது பெயர்களை பதிவு செய்திருப்பவர் கள் மேற்படி அலுவலகத்தின் மூலம் தங்களுக்குத் தரப்பட்டுள்ள பதிவு இலக்கத்தைக் கட்டாயம் கொண்டு வரும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# தற்கொலை அங்கிகள் மீட்பு

கொழும்பு, ஜூன் 2

சிலாபம் பகுதியில் மீனாத்தீவு என்னும் இடத்தில் புதைக்கப்பட்டிருந்த ஐந்து தற்கொலை அங்கிகள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் பேரில் பொலிஸாரும் போதைத் தடுப்பு பிரிவினரும் மேற்கொண்ட தேடுதலில் இவை மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

# மண்சரிவினால் நால்வர் பலி!

இரத்தினபுரி, ஜூன் 2

நாட்டின் பல பகுதிகளிலும் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக நேற்று முன்தினம் வரை நால்வர் உயிரிழந்தனர் என்று தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாள்களாக நாட்டின் சில பகுதிகளில் பெய்துவரும் கடும் மழை காரணமாக வெள்ளம் மற்றும் மண்சரிவு அபாயம் குறித்து எச்சரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக காலி, கேகாலை, களுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் இத்தகைய நிலைமை ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம்தெரிவித்துள்ளது.

இதே வேளை - இந்த வாரம் ஏற்படக் கூடிய சீரற்ற கால நிலை காரணமாக நாட்டின் அனைத்து பகுதிகளிலும் கடும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அறிவிக்கப்படுகிறது. (அ-02)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

989 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

கன்னி 02 32 40 51

30-05-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 5724119 - 5738726

ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 321,802 | 10/- | 3,218,020/- |
| 2 இலக்கங்கள் | 29,572 | 20/- | 591,440/- |
| 1 இல. + லக்கினம் | 29,252 | 30/- | 877,560/- |
| 2 இல. + லக்கினம் | 2,705 | 100/- | 270,500/- |
| 3 இலக்கங்கள் | 797 | 500/- | 398,500/- |
| 3 இல. + லக்கினம் | 69 | 5,000/- | 345,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | - |
| மொத்தம் | | | 6,101,020/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 384,206 | | 7,124,520/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,718,850/-

தொடர் இலக்கம் 4838125 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2008 ஜூன் 03 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மாத்தளை | 5730327-9-79 |
| அனுராதபுரம் | 5729861-4-67 |
| திருகோணமலை | 5732018-2-80 |
| மொனராகலை | 5735144-5-20 |
| மட்டக்களப்பு | 5731339-0-44 |


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06 . 03 . 1947



மறைவு 14 . 06 . 2007

## திருமதி சாரதாதேவி கணேசபிள்ளை

திதி: அபரபக்க சதுர்த்தசி

ஆண்டொன்று போனதம்மா உங்கள்
அன்பு முகம் எமைப்பிரிந்து
கண்முன்னே நீர் இல்லை
எம்மோடு உறவாட
எண்ணாத நாளில்லை இதயத்தில்
எப்போதும் உங்கள் நினைவுகளே!
அன்பின் இலக்கணமாய்
பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் நிறைகுடமாய்
எம் எல்லோரையும் வாழ வைத்த
ஒளி விளக்கே!
எம் உயிர் உள்ளவரை அழியாது
உம்நினைவு

குடும்பத்தினர்.

பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடி,
இணுவில் தெற்கு,
இணுவில். (சி/553073)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# குடும்ப சர்வாதிகார ஆட்சி மார்க்கோஸ் பாணியில் இங்கு

"வேலியில் போன ஓணானை மடியில் தூக்கிப் போட்டுக் கட்டிக்கொண்டு 'குடையுது! குடையுது!' என்றானாம்" - என ஒரு பேச்சுமொழி நம்மத்தியில் உண்டு.

ஜே.வி.பித் தலைவர்கள் இப்போது கூறும் கருத்துகள் இந்தப் பேச்சுமொழியைத்தான் நமக்கு நினைவுபடுத்துகின்றன.

மஹிந்த ராஜபக்ஷவை ஆட்சி அதிகாரத்திற்கு ஏற்றுவதற்காகத் தலையால் கிடங்கு கிண்டுவதற்கும் தயங்காத ஜே.வி.பியினர், இப்போது அவரது ஆட்சி அதிகாரத்தின் கொதிப்பைத் தாங்க முடியாமல் 'சுடுகுது மடியைப் பிடி' என்ற மாதிரித் துள்ளிக் குதிக்கின்றார்கள்.

இந்த ஆட்சி அதிகார பீடத்தை எப்படியும் வீழ்த்தியே தீருவோம் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இப்போது கட்சியின் தேசிய மாநாட்டில் சூளுரைத்துப் பிரகடனம் செய்திருக்கின்றார்கள்.

கட்சியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவுக்கோ இப்போதுதான் தாங்கள் ஆட்சிக்குக் கொண்டுவந்த சக்திகளின் உண்மைச் சொரூபம் புரியத் தொடங்கியிருக்கின்றது போலும்.

பிலிப்பீன்ஸ் தேசத்தை ஆட்டிப் படைத்த சர்வாதிகாரி பேர்டினன்ட் மார்க்கோஸ் குறித்து எல்லோருக்கும் தெரியும். மார்க்கோஸின் மனைவி இமெல்டா மார்க்கோஸ் உட்பட அக்குடும்பத்தின் ஆட்சி அதிகாரச் செல்வாக்கு அந்த நாட்டைச் சீரழித்தது எங்ஙனம் என்பது இரண்டு தசாப்தத்துக்கு முன்னர் உலகைப் பரபரப்பில் ஆழ்த்திய விவகாரமாக இருந்தது.

அந்த சர்வாதிகாரி மார்க்கோஸின் குடும்ப அதிகார ஆட்சித் துடுக்குத்தனத்துடன் ராஜபக்ஷ சகோதரர்கள் அன்ட் கம்பனியின் செயற்பாட்டை இப்போது ஒப்பிடுகின்றார் சோமவன்ஸ அமரசிங்க.

*"இலங்கை ஒரு பெரும் மாற்றத்துக்குள்ளாகிக் கொண்டிருக்கின்றது. அதிகாரம் ஒரு குடும்பத்திடம் குவிவது வளர்ந்துகொண்டே போகின்றது. ஆசியாவில் விரைவில் புதிய மார்க்கோஸ் உருவாகி விடுவார். கிழக்கு மாகாண சபைத் தேர்தலின்போது இடம்பெற்ற அராஜகங்களைப் போன்று பல அட்டூழியங்கள் நாட்டில் அரங்கேறப் போகின்றன. ஜூலை கடைசியில் இரண்டு மாகாண சபைகளுக்குத் தேர்தல்கள் நடக்கவிருக்கின்றன. எந்த வழியிலாவது - நேர்மையான முறையிலோ அநீதியான மார்க்கத்திலோ - நாங்கள் வெல்வோம் என அவர்கள் (அரசுத் தரப்பினர்) உறுதி கூறுகின்றனர். கிழக்கில் இந்த முறையைப் பரீட்சித்துப் பார்த்து அந்தத் தந்திரோபாயத்தின் வெற்றியைப் பிடித்திருக்கின்றார்கள். கிழக்கில் நீதி, நியாயமான தேர்தல் நடந்தது என்பதை ஏற்றுக்கொள்ளமாட்டோம்.*

*"சர்வாதிகார ஆட்சிக்கான தொடக்கம் இதுதான். ஆட்சி நடத்தும் குடும்பத்தின் உறுப்பினரான பாதுகாப்புச் செயலாளர் ஊடகங்களையும் எதிரணி அரசியல்வாதிகளையும் தகர்க்க எத்தனிக்கின்றார். சயாதீனமாகக் கருத்து வெளியிடுவதற்கான சுதந்திரம் விரைந்து பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஜனநாயகக் கட்டமைப்பில் ஊடகங்கள் தாம் முக்கிய பங்காற்ற வேண்டும். சர்வாதிகார ஆட்சியில்தான் ஊடகங்கள் நசுக்கப்படும். இப்படி அடக்குவதை நியாயப்படுத்த அவர்கள் பல்வேறு 'சல்ஜாப்பு'களையும் காரணங்களையும் கூறுவர்.*

*"ராஜபக்ஷ நிர்வாகத்தின் கொள்கைப் போக்கை நிராகரிக்கும்படி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அடிப்படை உறுப்பினர்களையே கோரும் தீர்மானம் ஒன்றை எமது கட்சியின் (ஜே.வி.பியின்) தேசிய மாநாட்டிலேயே நாம் நிறைவேற்றி உள்ளோம்."* - இப்படி சோமவன்ஸ அமரசிங்க கூறியிருக்கின்றார் எனத் தென்னிலங்கை ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

ஆக, இதுவரை காலமும் சிறுபான்மை இனமான தமிழர்கள் மீது - அவர்களது தேசியம் மீது - அவர்களது தாயகம் மீது - எதேச்சாதிகாரமாகக் கட்டவிழ்த்த கொழும்பு அரசுத் தலைமையின் சர்வாதிகாரம், இப்போது தனது பார்வையைத் தென்னிலங்கை மீதும் திருப்பத் தொடங்கிவிட்டது.

'புலிப் பயங்கரவாதிகளுக்கு எதிரான தொடர் இராணுவ நடவடிக்கை' என்ற பெயரில் - மாயையில் - இந்தச் சர்வாதிகாரமும், இராணுவ ஆக்கிரமிப்பும் தமிழர் தாயகம் மீது கட்டவிழ்ந்தபோது அதைப் பார்த்துக் கைகொட்டிச் சிரித்து, அந்த அராஜகத்தை ஊக்குவித்த பேரினவாத சக்திகள், இப்போது அதே அதிகார மமதை தங்களுக்கு எதிராகவும் திரும்பும் போதுதான் துள்ளிக் குதித்து சீறுகின்றன. உண்மை இப்போதுதான் அவர்களுக்கு மெல்ல உறைக்கத் தொடங்கியிருக்கின்றது.

மஹிந்த ராஜபக்ஷவை ஆட்சி அதிகாரத்தில் ஏற்றுவதற்காகப் பேரினவாதப் பூசலைக்கிளப்பி, அதில் குளிர் காய்ந்து, தேர்தல் வெற்றிகளை ஈட்டி, அந்தப் பின்புலத்தில் தமிழர் தாயகம் நசுக்கப்படுவதற்கும், 'வீடெரிக்கும் ராசாவுக்குக் கொள்ளிக்கட்டை கொடுக்கும் மந்திரி போல' செயற்பட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நிர்வாகத்தைத் தூண்டிவிட்ட ஜே.வி.பி., இப்போது எரிப்பு வேலை தமது தரப்புப் பக்கமும் திரும்பி விட்டதை உணரும்போதே தலைகீழாகக் குதிக்கின்றது.

நாட்டின் சட்டத்தைக் கூட மதிக்காமல் தான்தோன்றித்தனமாக அதிகார வர்க்கம் செயற்படும்போதுதான் சர்வாதிகாரம் வெளிப்படுகின்றது.

மோசமான மனித உரிமை மீறல்கள் போன்ற துஷ்பிரயோகங்கள் தாராளமாகி வரும் இந்தப் புறநிலையில்தான், இத்தகைய 'கிரிமினல்' குற்றங்களுக்கு இடமளித்து, வசதி செய்து, வாய்ப்பளிக்கும் அரச அதிகாரிகளை சர்வதேச சட்ட முறைமைகளுக்கு அமைய அக்கிரிமினல் குற்றங்களுக்குப் பொறுப்பாக்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று சட்ட விரோதப் படுகொலைகள், கண்மூடித்தனமான - விசாரணையின்றி நடக்கும் - மரண தண்டனை நடவடிக்கைகள் ஆகியவை தொடர்பான ஐ.நா. அறிக்கையாளர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இத்தகைய அதிகாரத் துஷ்பிரயோகக் கொடூரங்களை கிரிமினல் குற்றப் பொறுப்பாக்கும் சீற்றத்துடன் சர்வதேசம் காத்திருக்கின்றது என்ற உண்மையை அதிகார வர்க்கம் இன்னும் உணராமல் இருப்பதுதான் இத்தகைய கொடூரங்கள் தாராளமாக அரங்கேறக் காரணமாகும்.

# தேவகுமாரின் கொலைக்குக் காரணமானோர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்

## இது அரசின் கடமையென ஜனநாயகக் கட்சி வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன்2

ஊடகவியாலாளர் தேவகுமாரின் கொலைக்குக் காரணமான இனந் தெரியாதோரைக் கண்டு பிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவது அரசின் தட்டிக்கழிக்க முடியாத கடமை.

இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு அனுப்பிவைத்துள்ள செய் திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

கடந்த 28.05.2008 அன்று சக்தி, சிரச, எம்.ரி.வி தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் யாழ். மாவட்ட ஊடகவியலாளர் பரநிருபசிங்கம் தேவகுமார் யாழ்ப்பாணத்தில் கோரமாக வெட்டிக் கொல்லப்பட்டமை இனந் தெரியாதோரின் மிலேச்சத்தனமான செயலாகும்.

அவருடன் பயணித்த அவரது நண்பரும் அதே இடத்தில் வைத்துக் கொல்லப்பட்டிருக்கிறார். இக் கொலையானது மனித நேயத்திற்கு அப்பாற்பட்ட மிருகத்தனமான ஒன்றாகும்.

இதனை எமது புதிய ஜனநாயகக் கட்சி அரசியல் குழு மிக வன்மையாகக் கண்டிக்கின்றது.

யாழ். குடாநாட்டில் கடந்த இரண்டரை ஆண்டு காலத்தில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களில் தேவகுமார் ஒன்பதாவது நபராவார்.

இக்காலப் பகுதியில் நான்கு ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளனர். ஊடகப் பணிமனை, ஊடக ஊழியர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

ஊடகத்துறையைச் சேர்ந்த ஒவ்வொருவரும் உயிருக்கு உத்தரவாத மற்ற நிலையில் அச்சம் பீதியுடயேயே வாழ்ந்து வருகின்றனர்.

பலர் ஊடகத்துறையை விட்டு அகன்றுவிட்டனர்.

இத்தகைய சூழலிலும் மிகுந்த துணிச்சலுடன் சக்தி தொலைக்காட்சி ஊடகவியலாளராகப் பணி புரிந்து வந்தவர் தேவகுமார்.

இளம் குடும்பஸ்தரான அவரது கொலையால் ஏற்பட்ட இழப்பு அவரது குடும்பத்திற்கும் ஊடகத்துறைக்கும் மட்டுமின்றி யாழ்.மாவட்ட மக்களுக்குமானதாகும்.

இத்தகைய நடைமுறை நாட்டின் ஜனநாயகம், சுதந்திரம், மனித உரிமை என்பவற்றை அளப்பதற்குரிய ஓர் அளவு கோலாகவே உள்ளது - என்று உள்ளது.

(203)

# வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் மூத்த கலைஞர் கௌரவிக்கப்படவுள்ளனர்

அச்சுவேலி,ஜூன்2

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவு பண்பாட்டுப் பேரவை நடத்தும் பண்பாட்டுப் பெருவிழாவில் மூத்த கலைஞர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

சிறந்த கலைஞர்களைப் பாராட்டிக் கௌர்விப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வலி.கிழக்குப் பிரேதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 60 வயதுக்கு மேற்பட்ட சிற்பம், ஓவியம், நடனம், வாய்ப்பாட்டு, தவில், நாதஸ்வரம், நாட்டுக்கூத்து, இலக்கியம் போன்ற துறைகளில் சேவையாற்றியவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக 'செயலாளர், பண்பாட்டுப் பேரவை, வலி.கிழக்கு பிரதேச செயலகம், கோப்பாய்' என்ற முகவரிக்கு அனுப்புவைக்குமாறு வலி.கிழக்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் அறிவித்துள்ளார். (203-11)

# திறந்த பல்கலைக்கழக புதுமுக மாணவருக்கு

யாழ்ப்பாணம்,ஜூன்2

யாழ்.திறந்த பல்கலைக்கழகப் புதுமுக மாணவர்களை இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்குத் திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் ஒன்று கூடுமாறு 2008/2009 புதுமுக மாணவர்கள் கேட்டுள்ளனர்.

புதிய மாணவர்களின் பதிவு தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இன்று 8.30 மணியளவில் சந்திப்பு ஒன்று நடத்தபடவுள்ளதால் அனைவரையும் வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (203)

# தேர்தல் நடத்துவதை தடைசெய்யக் கோரி உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய முடிவு

கொழும்பு, ஜூன்2

எந்தவொரு தேர்தலையும் நடத்துவதை தடைசெய்யக் கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய ஐ.தே.கட்சி முடிவு செய்துள்ளது.

இந்தவாரம் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்படவிருப்பதாக அக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்தார்.

அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்தை செயற்படுத்தி, சுயாதீன ஆணைக்குழு செயற்படும்வரை தேர்தல்களை நடத்தக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

சுயாதீன ஆணைக்குழுவை செயற்படுத்தும் வரை இந்நாட்டில் சுதந்திரமான, நேர்மையான, பக்கசார்பற்ற தேர்தல் நடைபெறாது என்று சுட்டிக்காட்டிய திஸ்ஸ அத்தநாயக்க, தேர்தல் மோசடிகள் மற்றும் முறைகேடுகள் தொடர்பாக செயற்படுவதற்கு தேர்தல் ஆணையாளருக்கு போதியளவு அதிகாரமோ நிர்வாக கட்டமைப்போ இல்லை என்றும் தெரிவித்துள்ளார். (1)

# கவச வாகன விபத்தில் படையினர் 2 பேர் பலி

கொழும்பு, ஜூன்2

கதிர்காமத்துக்கு சமீபமாக கட்ட கமுவ என்னும் இடத்தில் படையினரின் கவச வாகனம் ஒன்று நேற்று முன்தினம் காலை விபத்துக்குள்ளாகியதில் இராணுவச் சிப்பாய் ஒருவரும் கடற்படைச் சிப்பாய் ஒருவரும் மரணமானார்கள்.

எதிரே வந்த வாகனம் ஒன்றுக்கு வழிவிட்டுக் கொடுத்தபோது கவச வாகனம் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

# தாவீது அடிகளாரின் நினைவுதின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன்2

கலாநிதி ஹ.சி.தாவீது அடிகளாரின் 27 ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் இன்று காலை 6 மணிக்குக் கோயில் வீதியிலுள்ள அருள் ஆச்சிரமத்தில் இடம்பெறவுள்ளன.

ஞானம் தமிழ்த்தூது தாவீது மன்றம், கத்தோலிக்க சபை இலக்கிய வட்டம் ஆகியன இணைந்து நடத்தும் இந்த நிகழ்வில் ஆத்மசாந்திப் பூசை, ஒப்புக் கொடுத்தல், நினைவுரை என்பன இடம்பெறும். (203)

# நாளை

| | |
|---|---|
| வைகாசி 21 | 03.06.2008 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | அமாவாசை |
| | பின்னிரவு 01.51 |
| நட்சத்திரம் : | கார்த்திகை |
| | மு.ப. 09.51 வரை |
| சுபநேரம் : | 10.22 - 11.52 |
| ராகுகாலம்: | 02.52 - 04.22 |

# வாசகர் திருமுகம்

## இலவச உலருணவு நிவாரண விநியோகம்; வாசகர் திருமுகத்துக்கு அரச அதிபர் பதில்

தங்களது பத்திரிகையில் வாசகர் திருமுகப் பகுதியில் 29.05.2008 ஆம் திகதி (வியாழக் கிழமை) திரு. க.கந்தையா, யாழ்ப்பாணம் என்பவரினால் எழுதி பிரசுரமாகியிருந்த விடயம் தொடர்பான விளக்கம் வருமாறு:-

உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங் களில் இருந்து இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்கள்/உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் ஊடாக ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் இலவச உலருணவு நிவாரண விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றது. அவ்வாறு யாழ்ப்பாண மாவட்டத் தில் மொத்தம் 20 ஆயிரத்து 108 குடும்பங் களுக்கு இடம் பெயர்ந்தோர் இலவச உலருணவு நிவாரணம் 2008 ஏப்ரல் மாதம் வரை வழங்கப்பட்டுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களிலிருந்து இடம் பெயர்ந்து நிவாரணத்திற்கு தகுதியான குடும்பங்கள் எவற்றிற்கும் இலவச உலருணவு நிவாரணம் வழங்கப்படவில்லையாயின் தங்கள் பிரிவு பிரதேச செயலாளருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

க. கணேஷ்,
அரசாங்க அதிபர்,யாழ். மாவட்டம்.

## பாராமுகமாக இருந்துவரும் பாரவூர்திச் சங்கம்

யாழ்.மாவட்டத்திற்குக் கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கி விநியோகிக்கும் பாரவூர்திகளிற்கு (லொறிகளுக்கு) கூலியானது நீண்ட நாள்களாக அதிகரிக்கப்படவில்லை. அதாவது 68 ரூபா டீசல் விற்ற காலத்திலே கொடுத்த கூலியே தற்போதும் பாரவூர்திகளுக்குக் கொடுக்கப்படுகின்றது. இப்போது டீசல் ஆனது ரூபா 120 ஆகியும் கூலி அதிகரிக்கப்படாமல் இருப்பது நியாயம் இல்லை.

தற்போது அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் மற்றும் வாகன உதிரிப்பாகங்களின் விலைகள் என்பன பல மடங்கு அதிகரித்துள்ளன. இவ்விலையேற்றத்தைக்கூடப் பாரவூர்திச் சங்கம் கவனத்தில் எடுக்கவில்லை.


பாரவூர்திச் சங்கத்தினால் கொடுக்கப்படும் கூலி பாரவூர்தி உரிமையாளர்களின் வாழ்க்கைச் செலவிற்கும் அத்துடன் பாரவூர்திகளுக்கு ஏற்படும் பழுதுபார்த்தல் செலவுகளுக்கும் போதாமல் உள்ளது. இதனால் தற்போது நடைமுறையில் இருக்கும் கூலிக்கு வாகனங்களைச் சேவையில் ஈடுபடுத்த முடியாது உள்ளது.

லொறி உரிமையாளர்களுக்குத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உருவாக்கப்பட்ட பாரவூர்த்திச் சங்கம் இவ்வாறு பாராமுகமாக இதுப்பது கவலையளிப்பதாகவுள்ளது.

தென்மராட்சி. பாதிக்கப்பட்ட பாரவூர்தி உரிமையாளர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.கு.ரவிச்சந்திரன்**
(B.A., Dip.in Edu., M.Edu.)
(அதிபர், யா/புத்த கலட்டி விஸ்ணு வித்தியாலயம், புத்தூர்)

எமது சனசமூக நிலையத்தின் முன்னாள் பொருளாளரும் நீண்டகால போசகருமாகிய திரு.கு.ரவிச்சந்திரன் அவர்கள் முதுகல்விமாணி பரீட்சையில் சித்தியடைந்தமையைப் பாராட்டுவதோடு, காட்டுமலைக் கந்தன் திருவருளால் மேன்மேலும் பல தேர்ச்சிகள் பெற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

**நாவலம்பதி மக்கள் சார்பாக**
**கலாநிதி சனசமூக நிலையம்.**
நாவலம்பதி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

(சி/553081)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 15 01 1925



மறைவு 03 05 2008

திருமதி
**கூழைப்பிள்ளை செல்லத்துரை**

நாள்கள் பல சென்றாலும் உங்கள் நினைவு மாறவில்லை அம்மா.

எமது அம்மா சிவபதமடைந்த செய்தி கேட்டுப் பலவழிகளில் உதவியும் ஆறுதலும் அளித்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

எஸ்.துரைசிங்கம் (மகன்- ஜேர்மனி),
எஸ். கமலாவதி (மகள்- லண்டன்),
ரி.விமலாவதி மகள்
குடும்பத்தினர்.

நாகர்கோயில் தெற்கு,
நாகர்கோயில்.
(சி/553080)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
### நன்றி நவிலலும் ஆத்மசாந்தி வழிபாட்டு அழைப்பும்



செல்வி
**இராசம்மா (தேவி) முதலித்தம்பி**

மண்ணில்:17.03.1944 விண்ணில்:03.05.2008

03.05.2008 அன்று இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (02.06.2008) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

77, கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில்.
(74915)
021-2225206

## புனரமைக்கப்பட்ட வீதி திறந்து வைப்பு

நல்லூர்,ஜூன்2
நயினாதீவு கிராஞ்சிக்குழி வீதி புனரமைக்கப்பட்டு பொதுமக்கள் பாவனைக்கெனத் திறந்து விடப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச சபை செயலாளர் கை. மகேந்திரலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் மேற்படி வீதியைத் திறந்து வைத்தார். (111)

## பொதுக்கூட்டம்

சங்கானை மேற்கு, தெற்கு விவசாயிகள் சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நிற்சாமம் ஞானவைரவர் ஆலயமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தொல்புரம் கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர் திருமதி கு.சாவித்திரி தேவி மற்றும் சங்கானை மேற்கு கிராம அலுவலர் ந.மகிழ்ராஜ், சங்கானைதெற்குகிராம அலுவலர் ந.சர்வானந்தன் ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்து கொள்வர். (203)

## வீதியால் சென்றோரை குளவி கொட்டியது

பனையிலிருந்து விழுந்த ஓலைக்குள்ளிருந்து புறப்பட்ட கங்குளவிகள்வீதியால்சென்ற பாடசாலை மாணவர்களைக்கொட்டியது.

இச்சம்பவம் அல்லாரையில் இடம் பெற்றது.

இதேஇடத்தைச் சேர்ந்த சி.திருமாறன் (வயது16) என்பவர் குளவியால் கொட்டப்பட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (203-207)

## திருமணப் பொன்விழா வாழ்த்துகள்

சுழிபுரம்- பறாளாய்
சிவசுப்பிரமணியர் தேவஸ்தான பாரத்துவாஜகோத்ரம்
ஸ்ரீ. ஸ்ரீமதி பாலகுருசாமிசர்மா விசாலாட்சி தம்பதியர்



ஏற்றமுறு சோழியபுர வேதியர் பாரத்துவாஜகோத்ரம்
போற்றுமுயர் ஸ்ரீ.ஸ்ரீமதி பாலகுருசாமிசர்மா விசாலாட்சி தம்பதியர்
ஈண்டு திருமணப்பொன்விழாவை பூர்த்திபெறும் நன்நாள் தன்னில் யாமெலாம்
கண்ணுதலோன் தாழ் வணங்கிப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சுழிபுரம்,
பறாளாய்.
(74981)

## கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் முன்னாள் தலைவவரான
**துரையப்பா வைத்திலிங்கம்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மாசாந்தியடைய மனோன்மணி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆலய பரிபாலனசபை,**
கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்.
(74981)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பும்

மண்ணுலகில் 11 . 11 . 1926



விண்ணுலகில் 04 . 05 . 2008

விஸ்வ பிரம்ம ஸ்ரீ
**அமரர் கந்தையா செல்லையா**

பத்துபிள்ளைகள் பெற்றெடுத்து
பக்குவமாய் பார்த்தெடுத்து
நித்தம் எம்மை காத்தெடுத்து
நிம்மதியாய் வாழவைத்த
எங்கள் குடும்பத் தலைவர் எங்கள் அப்பா!
எம்மை விட்டுப் பிரிந்து 31 நாள்கள் ஆனாலும்
எப்பிறப்பிலும் அவர் நினைவுகள் நின்றிருக்கும்
எம் மனங்களில்....

04.05.2008 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (03.06.2008) செவ்வாய்க்கிழமை காலை 6 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதில் கலந்து கொள்வதோடு, அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சித்தம்பாதி,
கரணவாய், கரவெட்டி.
(74980)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கிந்தியத் தீவுகளுடனான 2ஆவது டெஸ்ட்

# கட்டிச், கிளார்க்கின் சதங்களுடன் வலுவான நிலையில் ஆஸி. அணி


மைக்கல் கிளார்க்

அன்டிகுவா, ஜூன் 02

மைக்கல் கிளார்க், சைமன் கட்டிச் ஆகியோர் சதம் விளாச, மேற்கிந்தியத் தீவுகளுடனான இரண்டாவது டெஸ்ட்டில் ஆஸ்திரேலியா அணி தனது முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 479 ஓட்டங்களைக் குவித்தது. பதிலளித்து தனது முதல் இன்னிங்ஸை ஆடி வரும் மேற்கிந்தியத் தீவுகள் அணி, நேற்று முன்தினம் நிறைவுபெற்ற இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 125 ஓட்டங்களைப் பெற்று தடுமாறி வருகின்றது.

இந்தப் போட்டியின் மூலம் டெஸ்ட் வரலாற்றில் 10 ஆயிரம் ஓட்டங்கள் என்ற மகத்தான மைல்கல்லை கடந்தார் ஆஸ்திரேலிய அணித் தலைவர் பொண்டிங்.

இரண்டாவது டெஸ்ட் கடந்த வெள்ளிக்கிழமை அன்டிகுவாவில் ஆரம்பமாகியது. நாணயச் சுழற்சியில் வென்ற ஆஸ்திரேலிய அணித் தலைவர் பொண்டிங் முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார். முதல்நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டபோது ஆஸ்திரேலியா 3 விக்கெட் இழப்புக்கு 259 ஓட்டங்களை எடுத்திருந்தது. கட்டிச் 113 ஓட்டங்களுடனும் (9 பவுண்டரிகள்), கிளார்க் 38 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்றுமுன்தினம் இரண்டாம் நாள் ஆட்டம் நடைபெற்றது. தொடர்ந்தும் சிறப்பாக ஆடுவார் என எதிர்பார்க்கப்பட்ட கட்டிச் மேலதிகமாக ஓட்டமெதுவும் சேர்க்காமல் ரெய்லரின் வேகத்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். அடுத்துக் களம்புகுந்த அன்ட்ரூ சைமண்ட்ஸ் 18 ஓட்டங்களுடன் எட்வாட்ஸிடம் விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

மறுமுனையில் சிறப்பாக ஆடிய மைக்கல் கிளார்க் சதமடித்து பிரகாசித்தார். அவருக்கு ஒத்துழைப்பு வழங்கிய பிரட் ஹடின் 33 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து ரெய்லரின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். 7ஆவது விக்கெட்டில் ஜோடி சேர்ந்த மைக்கல் கிளார்க் - பிரட் லீ அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். 110 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது மைக்கல் கிளார்க், டரன் பவலின் பந்துவீச்சில பவிலியன் திரும்பினார்.

அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய பிரட் லீ அரைச்சதம் பதிவுசெய்து அசத்தினார். ஆஸ்திரேலியா அணி 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 479 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது தனது முதல் இன்னிங்ஸை இடைநிறுத்திக் கொண்டது. பிரட் லீ 63 ஓட்டங்களுடனும், மிற்செல் ஜோன்ஸன் 29 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸைத் தொடக்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு ஆரம்பம் ஓரளவு சிறப்பாக இருந்தது. முதல் விக்கெட்டுக்காக 55 ஓட்டங்கள் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் ஆரம்ப வீரரான டெவன் சிமித் 16 ஓட்டங்களுடன் ஜோன்ஸனின் வேகத்தில் விக்கெட்டை இழந்தார். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய மற்றைய ஆரம்ப வீரரான மார்ஷல் 53 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து மைக்கல் கிளார்க்கின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ. ஆனார். அதே ஓவரில் அடுத்து வந்த ருனாக்கோ மோட்ரனும் ஆட்டமிழந்தார்.

இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி தனது முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 125 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சர்வான் 32 ஓட்டங்களுடனும், சந்தர்போல் 5 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர். நேற்றிரவு 3ஆம் நாள் ஆட்டம் நடைபெறவிருந்தது.

# அரையிறுதியில் கோட்டைவிட்ட யுவராஜ் சிங்கின் பஞ்சாப் அணி

மும்பை, ஜூன் 02

ஐ.பி.எல். தொடரின் இறுதியாட்டத்துக்கு சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ஜோராக முன்னேறியது. நேற்றுமுன்தினம் நடந்த மிக முக்கியமான அரையிறுதிப் போட்டியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியை 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் சென்னை அணி மிகச் சுலபமாக வீழ்த்தியது.

ஐ.பி.எல். தொடரின் முதலாவது அரையிறுதியில் வென்ற ராஜஸ்தான் ராயல்ஸ் அணி ஏற்கனவே இறுதியாட்டத்துக்கு முன்னேறியது. நேற்று முன்தினம் மும்பையில் நடந்த இரண்டாவது அரையிறுதியில் டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, யுவராஜின் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியைச் சந்தித்தது. இப்போட்டியில் வென்றால் இறுதியாட்டத்துக்கு நுழையலாம் என்ற உற்சாகத்தில் சென்னை கிங்ஸ் அணி களமிறங்கியது. நாணயச்சுழற்சியில் வென்ற யுவராஜ் முதலில் துடுப்பாட்டம் செய்வது என்று துணிச்சலாக முடிவு செய்தார்.

பஞ்சாப் அணிக்கு எடுத்த எடுப்பிலேயே நெருக்கடி கொடுத்தார் சென்னை அணித்தலைவர் டோனி. எதையும் புதுமையாகச் சிந்திக்கும் இவர் இம்முறை முதல் ஓவரை 'சுழல் மன்னன்' முரளிதரனை வீசச் சொன்னார். இந்த ஓவரில் மார்ஷ் ஒரு பவுண்டரி அடிக்க, 7 ஓட்டங்கள் மட்டுமே கிடைத்தது. அடுத்த ஓவரை 'புயல் வேக' நிற்னி வீசினார். மூன்றாவது பந்து நன்கு விலகிச் செல்ல, ஹோப்ஸ்(2) தேவையில்லாமல் அடித்து ஆட்டமிழந்தார்.

மூன்றாவது ஓவரில் கோனி அதிர்ச்சி கொடுத்தார். இவர் வீசிய இரண்டாவது பந்து சங்கக்காரவின் துடுப்பை உரசிச் சென்றது. பிடியெடுத்த பார்த்தீவ் அரைமனதுடன் முறையீடு செய்தார். நடுவரும் முதலில் தயங்கினார். இந்த நேரத்தில் கில்கிறிஸ்ட் பாணியில் மனச்சாட்சிப்படி பவிலியன் நோக்கி விரைவாக நடந்த சங்கக்கரா(3) அதிர்ச்சி தந்தார். இவர் நின்று இருந்தால் ஒரு வேளை முடிவு சாதகமாக இருந்திருக்கலாம்.

நிற்னி வீசிய நான்காவது ஓவரில் ஒரு சிக்ஸர், பவுண்டரி அடித்து மிரட்டினார் மார்ஷ். மறுபக்கம் அணியைக் காக்க வேண்டிய பெரும் பொறுப்பில் இருந்த யுவராஜ் சொதப்பினார். கோனி பந்தை தூக்கி அடிக்க, முரளிதரன் பறந்து அபாரமாகப் பிடியெடுக்க 4 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார்.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட மார்ஷ் 23 ஓட்டங்களுடன் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்), நிற்னி வேகத்தில் 'போல்ட்' ஆனார். அடுத்து வந்த இர்பான் பதானும்(3) அவசரப்பட்டார். மூன்றாவது ஓட்டத்துக்காக வீணாக ஓட, 'ரன் அவுட்' ஆனார். மோர்கீல் வேகத்தில் ஜெயவர்த்தனா (8) ஆட்டமிழந்தார்.

இப்படி முன்வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் பொறுப்பற்ற முறையில் ஆட, பஞ்சாப் அணி 9.5 ஓவரில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 45 ஓட்டங்களை மட்டும் எடுத்துத் தத்தளித்தது. முரளிதரன் வலையில் பியூஸ் சாவ்லா(12) சிக்கினார்.

இதற்கு பின் வில்கின் மோட்டா, ரமேஷ் பவார் இணைந்து போராடினர். மோர்கீல் வீசிய 19ஆவது ஓவரில் பவார் ஒரு சிக்ஸர் விளாசினார். மோட்டா 25 ஓட்டங்களுடன் வெளியேறினார். பாலாஜி வீசிய கடைசி ஓவரில் 'ஹட்ரிக்' பவுண்டரிகள் அடித்து அசத்தினார் ரமேஷ் பவார்.

20 ஓவர்களில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 112 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. அதிகபட்சமாக 28 ஓட்டங்களை எடுத்த ரமேஷ் பவார் ஆட்டமிழக்காமல் இருந்தார். சென்னை சார்பில் நிற்னி, கோனி, மோர்கீல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

போகிற போக்கில் எட்டக் கூடிய இலக்கை விரட்டிய சென்னை அணிக்கு தொடக்கத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. இர்பான் பதான் வேகத்தில் வித்யூத்(6) ஆட்டமிழந்தார். இதற்குப் பின் பார்த்தீவ் பட்டேல், சுரேஷ் ரெய்னா இணைந்து தூள் கிளப்பினர். இவர்கள் யார் பந்துவீசினாலும் அடித்து நொறுக்க, பஞ்சாப் அணித்தலைவர் யுவராஜின் நிலைமை பரிதாபமாக இருந்தது.

பொறுப்பாக ஆடிய பார்த்தீவ் அரைச்சதம் கடந்து அசத்தினார். பியூஸ் சாவ்லா ஓவரில் ஒரு சிக்ஸர், இரண்டு பவுண்டரிகள் அடித்த ரெய்னா அரைச்சதம் கடந்ததோடு, அணியின் வெற்றியையும் உறுதி செய்தார். சென்னை கிங்ஸ் அணி 14.5ஆவது ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 116 ஓட்டங்களை எடுத்து அபார வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குள் சுலபமாக நுழைந்தது. பார்த்தீவ் 51 ஓட்டங்களுடனும் (8 பவுண்டரிகள்), ரெய்னா 55 ஓட்டங்களுடனும் (4 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள்) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஆட்ட நாயகன் விருதை நிற்னி தட்டிச் சென்றார். நேற்றிரவு நடக்கவிருந்த இறுதியாட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதவிருந்தன.

# சோதிடரிடம் ஞானேந்திரா ஆலோசனை

காத்மண்டு, ஜூன் 02

அரண்மனையை விட்டு எப்போது வெளியேறுவது, வெளியேறியபின் எங்கு வசிப்பது என்ற விவரங்களை அறிய சோதிடர்களின் உதவியை நாடியுள்ளார் நேபாள மன்னர் ஞானேந்திரா.

நேபாளத்தில் 240 ஆண்டு கால மன்னராட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு ஜனநாயக ஆட்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே அரண்மனையை விட்டு எப்போது வெளியேறுவது என சோதிடர்களிடம் ஞானேந்திரா ஆலோசனை நடத்தி வருகிறார். நேபாள மன்னர் பரம்பரையைப் பொறுத்தவரை எந்த ஒரு முக்கியமான விடயத்தையும் தொடங்குவதற்கு முன் நல்ல நேரம் பார்ப்பது வழக்கம். புனிதமான நாள்களில் மட்டுமே முக்கியமான முடிவுகளை எடுப்பர்.

ஞானேந்திரா மன்னராகப் பதவியேற்பதற்கு முன் காத்மண்டு புறநகர்ப் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் வசித்து வந்தார். அரண்மனையை விட்டு வெளியேறியபின் அந்த வீட்டிற்குச் செல்லலாமா அல்லது வேறு வீட்டிற்குச் செல்லலாமா என்பது குறித்து சோதிடர்களிடம் ஆலோசனை நடத்தி வருகிறார். எதிர்வரும் ஜூலை மாதம் வரை தொடர்ந்து அரண்மனையிலேயே இருப்பது நல்லது'' - என சோதிடர்கள் கூறியுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# ஊடகங்களுக்கு பிரசண்டா எச்சரிக்கை

காத்மண்ட், ஜூன் 02

நேபாளத்தில் புதிய அரசுக்குத் தலைமையேற்கவுள்ள மாவோயிஸ்ட் கட்சித் தலைவர் பிரசண்டா, தங்கள் கட்சியை விமர்சித்தால் கடும் விளைவுகள் ஏற்படும் என்று பத்திரிகைகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எங்களைத் தொடர்ந்து விமர்சனம் செய்தால் பொறுத்துக் கொள்ள மாட்டோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

அவரது பேச்சு பத்திரிகை சுதந்திரத்துக்கு எதிரானது என்று நேபாள பத்திரிகையாளர்கள் கூட்டமைப்புக் கண்டித்துள்ளது.

# ஜனாதிபதி முகாபேக்கு ஆதரவாக வாக்களியுங்கள்; இல்லையேல் இராணுவத்திலிருந்து வெளியேறுக!

## சிம்பாப்வே இராணுவத் தளபதி சக வீரர்களுக்கு எச்சரிக்கை

ஹராரி, ஜூன் 02

சிம்பாப்வேயில் மீள ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் ஜனாதிபதி றொபர்ட் முகாபேயும் போட்டியிடுகிறார். இந்நிலையில் இராணுவ வீரர்களை அவருக்கே வாக்களிக்குமாறும், இல்லையேல் இராணுவத்தை விட்டு வெளியேறிவிடுமாறும் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மார்ட்டின் செடோன்டோ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

புரட்சியைப் பாதுகாப்பதற்கான முகாபேயின் கொள்கைத் திட்டத்தைப் பாதுகாப்போம் என உறுதியளித்து, இராணுவ வீரர்கள் கையெழுத்திட்டுள்ளார்கள். தங்களது வாக்குறுதியை காப்பாற்ற வேண்டிய கடப்பாடு இராணுவ வீரர்களுக்கு உண்டு என்றும் அவர் சுட்டிக் காட்டினார் என உத்தியோகபூர்வ ஹெரால்ட் செய்திப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

உங்களுக்கு வேறுவிதமான எண்ணங்கள் இருக்குமானால், இராணுவச் சீருடையைக் களைந்து விடுங்கள். அணியாதீர்கள். நீங்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள் அல்லர். கூலிக்காக சேவகம் புரியும் அயல்நாட்டு வீரர்களே அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள் என்றும் அவர் தமது உரையில் வலியுறுத்தியுள்ளார்.

ஜெனரல் செடோன்டோ, ஹராரியின் புறநகர்ப் பகுதியில் நடைபெற்ற இலக்கு வைத்து சுடும்போட்டி நிகழ்வில் கலந்து கொண்டு பேசினார். முக்கிய எதிர்க்கட்சி வேட்பாளரான மோர்கன் சவான்கிராய் ஜூன் 27ஆம் திகதிய தேர்தலில் வெற்றிபெற்றாலும் அவரைத் தாங்கள் ஆதரிக்கப் போவதில்லை என ஏற்கனவே இராணுவ ஜெனரல்கள் பிரதிக்ஞை செய்திருக்கிறார்கள் என்றும் ஹெரால்ட் குறிப்பிட்டுள்ளது.


...பாப்வே ஜனாதிபதி முகாபே

# ஆசிய நாடுகளின் பாதுகாப்பு விடயத்தில் அமெரிக்க அரசு தொடர்ந்து உதவி புரியும்

## அந்நாட்டு இராணுவ அமைச்சர் பேட்டி

சிங்கப்பூர், ஜூன் 02

''ஆசிய மண்டல நாடுகளின் வளர்ச்சியிலும், பாதுகாப்பிலும் அமெரிக்கா மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளது. எனவே ஆசிய நாடுகள் மீது அமெரிக்கா கொண்டுள்ள அக்கறை எந்த அரசு வந்தாலும் தொடர்ந்து நீடிக்கும். ஆசிய நாடுகளின் பாதுகாப்புத் தொடர்பான விடயத்தில் அமெரிக்க அரசு தொடர்ந்து உதவி செய்யும்.''

- இவ்வாறு அமெரிக்க இராணுவ அமைச்சர் றொபேர்ட் கேட்ஸ் கூறியுள்ளார்.

அமெரிக்க இராணுவ அமைச்சர் றொபேர்ட் கேட்ஸ் நேற்றுமுன்தினம் சிங்கப்பூரில் நடந்த ஆசிய மண்டல நாடுகள் கூட்டத்தில் கலந்து கொண்டார். அங்கு அவர் கூறியவை வருமாறு:-

நடைபெற இருக்கும் அமெரிக்கத் தேர்தலில் யார் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தாலும் ஆசிய நாடுகளின் பாதுகாப்பு தொடர்பான விடயத்தில் அமெரிக்க அரசு தொடர்ந்து உதவி செய்யும். ஆசிய மண்டல நாடுகளின் வளர்ச்சியிலும், பாதுகாப்பிலும் அமெரிக்கா மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளது. எனவே ஆசிய நாடுகள் மீது அமெரிக்கா கொண்டுள்ள அக்கறை எந்த அரசு வந்தாலும் தொடர்ந்து நீடிக்கும்.

மேலும் ஆசியக் கண்டத்தின் அத்தனை நாடுகளுடனும் அமெரிக்கா இணக்கமான உறவு வைத்துக் கொள்வதையே விரும்புகிறது. இராணுவத்துக்குச் செலவு செய்யும் விடயத்தில் வெளிப்படையான தகவல்களை சீனா தெரிவிப்பதில்லை. இவ்விடயத்தில் உண்மையான தகவல்களைத் தர சீனா முன்வரவேண்டும் - என றொபேர்ட் கேட்ஸ் மேலும் கூறினார்.

# உணவுப் பொருள்கள் விலையேற்றம்: கென்யாவில் பெரும் ஆர்ப்பாட்டம்!

நைரோபி, ஜூன் 02

கென்யாவில் உணவுப் பண்டங்களின் விலைகள் அபரிமிதமாக எகிறி வருவதற்கு மக்கள் மத்தியில், கடும் ஆட்சேபனை கிளம்பியுள்ளது. தலைநகரான நைரோபியில் நேற்றுமுன்தினம் ஆயிரக்கணக்கானோர் ஆட்சேப ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கோதுமை மாவின் விலை உட்பட அத்தியாவசியப் பண்டங்களின் விலைகளைக் குறைக்குமாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பினார்கள். கோரிக்கைகள் அடங்கிய அட்டைகளையும் பதாகைகளையும் அவர்கள் ஏந்தியிருந்தார்கள்.

ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்துக்கு விரைந்து வந்த கலகம் அடக்கும் பொலிஸார் கூட்டத்தினரைக் கலைக்க கண்ணீர்ப்புகைக் குண்டுப் பிரயோகம் செய்தனர். தடியடி நடத்தினர். இதனால் அநேகர் காயமடைந்தனர். 21 முக்கிய பிரமுகர்கள் கைதுசெய்யப்பட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போதல் பற்றிய விசாரணைகளில் வெளிப்படைத்தன்மை நிலவுவது அவசியம்!

## அமெரிக்க அதிகாரி வற்புறுத்தல்

கொழும்பு, ஜூன் 02

இலங்கையில் ஆள்கள் காணாமற் போதல் தொடர்பாக இடம்பெறும் விசாரணைகளில் வெளிப்படைத்தன்மை நிலவ வேண்டும் என அமெரிக்கா கோரியுள்ளது.

கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமெரிக்காவின் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கான பிரதி உதவி வெளிவிவகார அமைச்சர் எரிக்கா பர்க்ஸ் ரகில்ஸ் அம்மையார் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

காணாமற்போதலுடன் தொடர்புடையவர்களை நீதியின் முன் நிறுத்துமாறும் வலியுறுத்தியுள்ள அவர், அதில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

மனித உரிமைகள் பாதுகாப்பு விடயம் நாட்டின் அபிவிருத்தி விடயங்களையும் பாதிக்கின்றது.

பாதுகாப்புக் கரிசனைகளும், மனித உரிமை விவகாரங்களும் காணப்படும் போது இங்கு வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்வது கடினம்.

அரச அதிகாரிகளுடனான சந்திப்பின் போது காணாமற் போனவர்கள் குறித்த எமது கவலையைத் தெரிவித்தேன். இந்த விடயத்தில் சில முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கொழும்பில் சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

எனினும், கிழக்கில் காணாமற்போதல் அதிகரித்துள்ளமை எமக்குக் கவலையளித்துள்ளது.

காணாமற்போதலில் தொடர்புடையவர்கள் எவராக இருந்தலும் - பாதுகாப்புப் படையினரே குற்றக் கும்பல்களைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் - அவர்களை நீதியின் முன் நிறுத்த வேண்டும்.

முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் இவை குறித்துப் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். இதன் மூலம் மக்களுக்கு என்ன நடைபெறுகின்றது என்பது தெரிய வரும்.

ஏனெனில், தற்போது இது குறித்த தகவல்கள் அதிகளவிற்குக் கிடையாது. இதன் காரணமாக அரசு நடவடிக்கை எடுத்தால் கூட அது அநேகமானவர்களுக்குத் தெரிய வராத நிலையுள்ளது. இது பொதுமக்கள் மத்தியில் அரசின்நற்பெயரைப்பாதிக்கின்றது.

நாங்கள் இந்த விடயங்களை சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிச் செல்வதற்கான சூழ்நிலை காணப்படுவதன் அடிப்படையிலும் ஆராய்ந்தோம். - என்றார் அவர்.(உ)

# தென்மராட்சி வரணிப் பகுதியில் வயோதிபர் வெட்டிக்கொலை!

யாழ்ப்பாணம், ஜூன் 02

யாழ்ப்பாணம் தென்மராட்சி, வரணியிலுள்ள குடமியன் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு வயோதிபர் ஒருவர் படுக்கையில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதே இடத்தைச் சேர்ந்த சின்னக்குட்டி சின்னத்துரை (வயது-71) என்ற வயோதிபரே இவ்வாறு வெட்டிக் கொலை செய்யப்பட்டவராவார்.

சம்பவதினம் இரவு இந்த வயோதிபர் வீட்டின் அறை ஒன்றில் உறங்கிக் கொண்டிருந்தார் என்றும், அவரது மனைவி வீட்டு விறாந்தையில் படுத்திருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் நேற்று அதிகாலை வயோதிபரின் மனைவி விழித்தெழுந்த வேளை, கணவர் வெட்டப்பட்ட நிலையில் சடலமாகக் காணப்பட்டார் என்றும் அறியமுடிந்தது.

இவரது சடலம் நேற்று மாலை 3.30 மணியளவில் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு எடுத்துவரப்பட்டது. சம்பவம் தொடர்பிலான விசாரணையை கொடிகாமப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (203-25-78)

# சனிக்கிழமை நடைபெற்ற மோதல்களில் 4 படையினர், புலிகள் 7 பேர் உயிரிழப்பு

## அரசு தரப்பில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 02

வடக்கின் போர் முனைகளில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவங்களில் நான்கு இராணுவத்தினர் உயிரிழந்தனர் என்றும், மேலும் எட்டுப்பேர் படுகாயமடைந்தனர் என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மணலாறு, ஜானகபுரப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சமரில் விடுதலைப் புலிகளில் இருவர் உயிரிழந்தனர் என்றும் மற்றும் இருவர் காயமடைந்தனர் என்றும் தமது தரப்பில் மூவர் உயிரிழந்தனர் என்றும், இருவர் படுகாயமடைந்தனர் என்றும் படைத்தரப்பில் கூறப்பட்டது.

இதேவேளை, வவுனியா முன்னரங்க நிலைகளில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவங்களில் விடுதலைப் புலிகளில் ஏழுபேர் உயிரிழந்தனர் என்றும் படைத்தரப்பில் கூறப்பட்டது.

இதேசமயம் மன்னார் முன்னரங்க நிலைகளில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதல்களில் மூன்று இராணுவத்தினர் படுகாயமடைந்த நிலையில் மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்றும் படைத்தரப்பில் மேலும் கூறப்பட்டது.

யாழ்ப்பாணம், முகமாலை, கிளாலி மற்றும் நாகர்கோவில் பகுதிகளில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சமர்களில் விடுதலைப் புலிகளில் மூவர் படுகாயமடைந்தனர் என்றும் தமது தரப்பில் ஒருவர் உயிரிழக்க மேலும் ஒருவர் படுகாயமடைந்தார் என்றும் படைத்தரப்பில் மேலும் கூறப்பட்டது. (சி)

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 02

அராலி ஆவரம் பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இன்று காலை 8மணி முதல் மகாசங்காபிஷேகம் இடம் பெறவுள்ளது.

மாலை 3மணிக்கு வசந்த மண்டப பூசை யுடன் ஆரம்பமாகி அம்பாள் வீதியுலா வருவார். (01)

## எத்தகைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிபொருள் விலையேற்றத்தை முதன்மைப்படுத்தி நாட்டில் குழப்பகரமான சூழலை உருவாக்கி விடுதலைப் புலிகளுக்கு எதிரான அரசின் நடவடிக்கைகளில் பின்னடைவை ஏற்படுத்த சில தீய சக்திகள் முயல்கின்றன. உலக சந்தையில் எரிபொருள் விலை மேலும் பல டொலர்களால் அதிகரித்தாலும் வடக்கை மீட்பதற்கான நடவடிக்கை கைவிடப்படமாட்டாது.

எத்தகைய இடையூறுகளை ஏற்படுத்தினாலும் வடக்கை மீட்கும் அரசின் முயற்சிகள் எக்காரணம் கொண்டும் கைவிடப்படமாட்டாது எனவும் அவர் உறுதியாகத் தெரிவித்தார். (சி)

## கருணாவைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுகோளின் படி கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகம் கருணா என்று தெரியாமலேயே அவருக்கு விசா[illegible] வழங்கியமை பிரிட்டன் தனக்கு ஏற்பட்ட அவமானமாகக் கருதுகின்றது என்றும் கூறப்பட்டது.

வேறொரு பெயர் கொண்ட கடவுச்சீட்டில் கருணா விசா அனுமதி பெற்று பிரிட்டனுக்குள் நுழைந்த விவகாரத்தில் தமக்குத் தொடர்பு ஏதுமில்லை என்று இலங்கை அதிகாரிகள் தெரிவிக்கின்றபோதிலும், இலங்கை அரசிற்கு அதில் தொடர்புள்ளதாக பிரிட்டன் உறுதியாக நம்புகின்றது.

தற்போது பிரிட்டனின் ஹர்மொன்ட்ஸ் வேர்த்தில் தடுப்பு முகாம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ள கருணா, உரிய ஆவணங்கள் பூர்த்தியானதும் ஸ்ரீலங்கா எயர்லைன்ஸ் மூலம் இலங்கைக்கு அனுப்பப்படலாம் எனத் தெரிகிறது. (உ)

**உடன் தேவை**

- P3 அல்லது P4 கணனி தேவை, விற்க வைத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.
- போட்டோ பிரதிக்கடையில் வேலை செய்யக் கூடியவர்கள் தேவை.
(பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்)
- தரம் 7 பிள்ளைக்கு கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் கற்பிக்கக் கூடியவர்கள் தேவை.

**பரணி தொழில்நுட்ப சேவை**
166, நாவலர் வீதி, யாழ்.
T.P:- 7442, 0776510149.

## கைதடிக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பத்துடன் தங்கியருந்த மகாராஜா குகதாசன் (வயது-26) என்பவரும் அவரது ஒன்றுவிட்ட சகோதரரான சபாரத்தினம் பகீரதன் (வயது-16) ஆகிய இருவருமே கடந்த மே 30ஆம் திகதி இரவு 10.30 மணியளவில் வெள்ளை வானில் வந்தோரால் கடத்திச் செலல்லப்பட்டுள்ளனர்.

இவர்களைக் கடத்தியவர்கள் பின்னர் இளைஞர் பகீரதனை இடையில் இறக்கிவிட்டு குகதாசனை மட்டும் கொண்டு சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகவலை குகதாசனின் மனைவியான விவிதாவும், கடத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட பகீரதனின் தந்தையாரான வாரித்தம்பி சபாரட்ணமும் பிரதியமைச்சர் இராதாகிஷ்ணனிடம் தெரிவித்தனர்.

''யாழ். கைதடிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வந்து நீர்கொழும்பு குடாப்பாட்டில் இரண்டரை வருடமாகத் தங்கியுள்ளோம். எனது கணவரை எதற்காகக் கடத்திச் சென்றனர் என்பது எனக்குப் புரியவில்லை. அவரது உழைப்பை நம்பியே எமது குடும்பம் உள்ளது. இந்நிலை யில் மிகவும் கஷ்டப்படும் எமது நிலையைக் கருத்தில் கொண்டு கணவரைக் கண்டு பிடித்துத் தருங்கள்'' - என மனைவி விவிதா முறைப்பாடும்செய்தார்.

இவ்விடயம் தொடர்பாக பயங்கரவாத தடுப்புப் பிரிவு அத்தியட்சகர் நந்தன முனசிங்க விடம் பிரதியமைச்சர் முறைப்பாடு செய்துள்ளார். (சி)

**வாங்கி விட்டீர்களா?**
தரம் 1, 2, 3, 4, 5 மாணவர்களுக்குரிய மாதாந்த வெளியீடு
அம்மா
அன்னை
தாய்
அறிவு
தேடல்
''உங்கள் பிள்ளையின் ஆற்றலை மேம்படுத்தும்''
இது ஓர் கற்சுமி வெளியீடு

## மதபோதகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுவனேஸ்வரன் (வயது-22)எனும் அவரது உதவியாளரும் சனிக்கிழமை தப்போவ பகுதியில் வைத்து வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்டனர் எனப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது.

மதவழிபாடு தொடர்பான சர்ச்சையே இக்கடத்தலுக்கான காரணமாக இருக்கலாம் எனவும் முன்னரும் இப்பிரிவைச் சேர்ந்தவர்கள் கடத்தப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, புத்தளத்தைச் சேர்ந்த மேலும் இரு தமிழ்இளைஞர்கள் வெள்ளைவானில் வந்தவர்களால் கடத்திச்செல்லப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## வெள்ளவத்தை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுகுறித்து மேலும் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு:-

வெள்ளவத்தையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பக்கட்ட விசாரணைகளின்போது குறித்த பஸ் தரிப்பிடத்தில் காத்திருந்த ஒருவராலேயே மேற்படி குண்டு வெடிக்கவைக்கப்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

இதன்போது குண்டை வெடிக்க வைத்தவரும் சம்பவத்தில் காயமடைந்துள்ளார் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். அவர் குறித்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறித்த தாக்குதலில் சுமார் 10 பேர் வரை படுகாயமடைந்து வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து குறித்தபிரதேசத்தில் பொலிஸாரால் சோதனை மற்றும் தேடுதல் நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இதன்போது 13 தமிழர்கள் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களிடம் தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறித்த குண்டுவெடிப்பானது மோட்டார் சைக்கிளில் வந்த இருவராலேயே மேற்கொள்ளப்பட்டது என முன்னர் தெரிவிக்கப்பட்டது. தற்போது இச்சம்பவ விசாரணைகளில் திருப்புமுனையொன்று ஏற்பட்டுள்ளது. இத்திருப்புமுனையை அடுத்து பொலிஸாரின் விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, சம்பவத்தின்போது காயமடைந்த பத்துப்பேரின் உடல்நிலை தற்போது தேறிவருகிறது என களுபோவில வைத்தியசாலையின் பணிப்பாளர் குமாரசிறி தெரிவித்தார்.

இந்தக் குண்டு வெடிப்பில் இரு தமிழ் இளைஙர்கள் மரணமாயிருந்தனர்.

அவர்களில் ஒருவர் சிலிங்கோ இன்சூரன்ஸ் நிறுவனத்தில் கனிஷ்ட பதவி நிலை அதிகாரியான யோகரத்தினம் கீதன் (வயது 28) என்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

யாழ்.பரியோவான் கல்லூரி பழைய மாணவனான இவர் கச்சேரி காட்டுக் கந்தோர் ஒழுங்கையைச் சேர்ந்தவர் ஆவார்.

## அரசுக்கு எதிராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2005ஆம் ஆண்டு மக்களுக்கு அளித்த உறுதிமொழிகளை நிறைவேற்ற அரசு தவறியுள்ளதால் அரசுக்கு எதிராக அணிதிரளும் கூட்டணியில் சேர்வதற்கு தமக்குரிய நேரம் வந்துவிட்டதாக ஜே.வி.பி. கருதுகின்றது -என்றும் கூறப்பட்டது.

மேலும், கூட்டணியில் தலைமைப் பொறுப்பை ஏற்பதுடன், எதிர்க்கட்சித் தலைவர் என்ற பொறுப்பிலும் ரணில் விக்கிரமசிங்கவே தொடர்ந்தும் நீடிப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் புதிய கூட்டணியின் பொதுச் செயலாளராக முன்னாள் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் பணிப்பாளர் ரிரான் அலஸ் நியமிக்கப்படவுள்ளார் - என்றும் பேச்சடிபட்டது. (உ)

## தெற்கில் பெரு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவைகள் நிலையம் தெரிவித்துள்ளது.

பாலிந்தநுவர, புளத்சிங்கள பகுதிகளே மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. 22 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இப்பிரதேச செயலரளர் பிரிவில் பாதிக்கப்பட் டுள்ளனர்.

### நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டன

வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயத்தைத் தடுப்பதற்காக நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளன. மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

கடும் காற்றினால் பல இடங்களில் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளதால் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்திலும் மண் சரிவு அபாயம் குறித்து எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இரத்தினபுரி மாவட்டத்தின் குருவிட்ட,கலவானை, அயகம ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கடும் மழை வெள்ளம் காரணமாக மக்கள் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளனர்.

பதுரலிய நகரம் முற்றுமுழுதாக நீரில் மூழ்கியுள்ளது.

### போக்குவரத்து பாதிப்பு

இதேவேளை, தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக பல முக்கிய வீதிகளில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

மத்துகமவிலிருந்து கலவானை, கெலின் கந்தப் பகுதிக்கு செல்லும் வீதியில் போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது. அக்குரஸ்ஸவிற்கான பஸ் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இரத்தினபுரி - பாணந்துறை நெடுஞ்சாலையில் பல பகுதிகளும் வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று வெள்ளப்பெருக்குக் காரணமாக அவிசாவளை - கொழும்பு வீதியும் பல இடங்களில் பாதிக்கப்பட்டுள்ளது.

கடுவெல , ஜா-எல பகுதிகளில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். களனி ஆற்றைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ள அபாயம் காணப்படுகின்றது.

### நகரம் நீரில் மூழ்கும் அபாயம்

இரத்தினபுரிப் பகுதிகளிலேயே கடும் மழை பெய்ததாகக் காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. நேற்றுக் காலை 8.30 மணியுடன் முடிந்த 24 மணி நேரத்தில் இரத்தின்புரியில் 110.2 மில்லி மீற்றர் மழையும் கொழும்பில்35.2மி.மீ. மழையும் பெய்துள்ளது.

இரத்தினபுரியில் களுகங்கை ஆற்றின் நீர்மட்டம் 19 அடியாகக் காணப்படு கின்றது. இது 20அடியாக அதிகரித்தால் அந்த நகரம் நீரில் மூழ்கும் அபாயமுள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மத்துகமப் பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோரை ஹெலிக்கொப்டரின் உதவியுடன் காப்பற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-உ-1)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.06.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org